விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 200 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 23 செவ்வாய்க்கிழமை (07.07.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# நீர்கொழும்பு சிறையில் கலவரம்







- 7 அதிகாரிகள் உட்பட 27 பேர் உயிரிழப்பு.
- 100ற்கு மேற்பட்டோர் காயம்.
- போதை கடத்தல்காரர்களால் திட்டமிடப்பட்ட கலவரம் எனப் பொலிஸார் தெரிவிப்பு.

(16ஆம் பக்கம் பார்க்க)

## 700 கைதிகள் வேறு சிறைக்கு மாற்றம்

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட வன்முறை மற்றும் மோதல் சம்பவங்களைத் தொடர்ந்து, அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த

15ஆம் பக்கம் பார்க்க

## சிறைச்சாலை மோதலுக்கு அரசாங்கமே பொறுப்பு

எதிர்க்கட்சித் தலைவர்

07ஆம் பக்கம் பார்க்க

## அமைதியை ஏற்படுத்த குறைந்த பலப் பிரயோகம்

### சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர்

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் நேற்றுக் காலை மீண்டும் மோதல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, அங்கு நிலைமையைச் சீர் செய்யவும் அமைதியை நிலைநாட்டவும் சிறை அதிகாரிகள் தேவையான குறைந்தபட்ச பலப்பிரயோகத்தையே

15ஆம் பக்கம் பார்க்க

சிறைச்சாலையில் மோதல்

## விசாரணைக்கு நீதியரசர் தலைமையில் குழு நியமனம்

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவம் குறித்து முறையான மற்றும் விரிவான விசாரணை மேற்கொள்ள உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையிலான விசாரணைக்குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை

15ஆம் பக்கம் பார்க்க

## சிறைக்கலவரத்துக்கு பொறுப்பேற்கிறேன்

### நீதி அமைச்சர் ஹர்ஷன



(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற உயிரிழப்புகளை ஏற்படுத்திய மோதல் சம்ப

15ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரி நகர சபையின் உப தவிசாளர் பதவி பறிப்பு

### இடைக்காலத் தடைவிதிக்க நீதிமன்றம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகர சபையின் உப தவிசாளரின் பதவி மற்றும் உறுப்பினர் பதவியை வறிதாக்கிய வடமாகாண ஆளுநரின் சுற்றுநிருபத்திற்கு இடைக்காலத் தடைக் கட்டளை வழங்க யாழ்ப்பாணம் மாவட்ட மேல் நீதிமன்றம் மறுத்துள்ளது.

உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபத்தை சபையில் கடுமையாக விமர்சித்து, அதனைத் தூக்கி

15ஆம் பக்கம் பார்க்க

## ஆலயத்துக்குச் செல்லும் பாதையை திறந்து விடுக

### முள்ளிக்குளத்தில் கவனயீர்ப்புப் போராட்டம்



02ஆம் பக்கம் பார்க்க

யாழ்.மருதங்கேணியில்

## 28 ஏக்கர் காணியை சுவீகரிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, மருதங்கேணிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுமார் 28 ஏக்கர் (11.2657 ஹெக்டேயர்) பரப்பளவைக் கொண்ட காணியைப் பகிரங்கப் பொதுத்தேவைக்காக

16ஆம் பக்கம் பார்க்க

## கடமை நேரத்தில் இளம் அதிபர் உயிரிழப்பு



15ஆம் பக்கம் பார்க்க

கோட்டாபயவின் மனுவை

## உயர் நீதிமன்றுக்கு மாற்றுமாறு கோரிக்கை

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளில் தாம் கைது செய்யப்படுவதைத் தடுத்து உத்தரவிடுமாறு கோரி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நடுநிலை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீதியில் மணலைக் கொட்டி தப்பியோடிய உழவு இயந்திரம்

## மடக்கிப் பிடித்த பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், சாவகச்சேரி மறவன்புலவு பகுதியில் சட்ட விரோதமாக மணல் கடத்திச் சென்ற உழவு இயந்திரம் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்புவதற்காக வீதி முழுவதும் மணலைக் கொட்டி, தடையை ஏற்படுத்தியவாறு தப்பியோடிய நிலையில் பொலிஸார் நீண்ட தூரம் துரத்திச் சென்று கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சட்டவிரோதமாக மணல் ஏற்றி சென்ற உழவு இயந்திரத்தை பொலிஸார் மறித்து நிறுத்த முயன்றபோது, சாரதி பொலிஸாரின் கட்டளையை மீறி வாகனத்தை வேகமாக செலுத்திச் சென்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் உழவு இயந்திரத்தை துரத்திச் சென்ற நிலையில், தம்மை பொலிஸார் பின் தொடர்வதைத் தடுக்கும் நோக்கில் உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்ற மணலை வீதியில் சிதறவிட்டபடியே தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், பொலிஸார் நீண்ட தூரம் தொடர்ந்து துரத்திச் சென்றதையடுத்து, உழவு இயந்திரத்தை வீதியோரத்தில் கைவிட்டுவிட்டு, சாரதியும் அதில் பயணித்தவர்களும் தப்பியோடியுள்ளனர்.

சம்பவ இடத்திலிருந்து உழவு இயந்திரத்தை கைப்பற்றிய பொலிஸார் தப்பியோடிய சாரதி மற்றும் அவருடன் பயணித்தவர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் கடத்தலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)



தமிழ்நாட்டில் இயங்கி வரும் தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறனை யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது தான் எழுதிய "இலங்கைத் தமிழர் பிரச்சினை இந்தியாவின் துரோகக் கொள்கை" என்ற நூலினை தமிழ் தேசிய பேரவையினருக்கு பழ.நெடுமாறன் வழங்கிவைத்தார்.

# மாதகலில் விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாதகலில் நேற்றுக் காலை இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் சில்லாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி தேவராசா (வயது - 80) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த நபரை சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் வாகனம் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மரண விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,33,104)

## உயர் ...

வினால் தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனுவை உயர் நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு சட்டமா அதிபர் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான பிரதி மன்றாடியார் நாயகம் சுஹர்ஷி ஹேரத் இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

மனுதாரரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் அடிப்படை உரிமைகள் சார்ந்த விடயங்கள் என்பதால், அது குறித்து பரிசீலனை செய்யும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு இல்லை என அவர் சுட்டிக் காட்டினார்.

இதன் காரணமாக, இந்த மனுவை உயர் நீதிமன்றத்துக்கு மாற்றுவதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமாறு அவர் நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டார்.

இதன்போது, மனுதாரரான கோட்டாபய ராஜபக்ஷ சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தனது சமர்ப்பிப்புகளை நிறைவு செய்தார்.

அதற்கமைய, குறித்த வழக்கு மேலதிக சமர்ப்பிப்புகளுக்காக எதிர்வரும் 9 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-7)


11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 18.07.1949

இறப்பு: 08.07.2015

அச்சுவேலி வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட

**அமரர் கதிரவேலு சந்திரலிங்கம்** (வெள்ளை)

(ஓய்வுநிலை மேற்பார்வையாளர் அச்சுவேலி பனைதென்னைவள அ.கூ.சங்கம்)

**திதி : அபரபக்க ஸப்தமி**

அன்பும் அரவணைப்பும், ஆறுதல் வார்த்தைகளும்
அன்றி யாதொன்றும் நின்னிடம் நாம் கண்டது இல்லை ஐயா!
நாட்கள் மாதங்களாய், வருடங்கள் தாண்டி
எமை விட்டு இறைவனிடம் சேர்ந்து
ஆண்டு பதினொன்று ஆனதே ஐயாவே!
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
அழகான நின் நினைவுகள் எமைவிட்டு
என்றுமே அழியாது ஐயா!
எமை ஆசீர்வதித்து நல்வழி காட்டுங்கள் ஐயாவே!

கோப்பாய் தெற்கு,
கட்டப்பிராய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

(2487)


## ஆலயத்துக்கு...

முள்ளிக்குளம் கிராமத்தில் இருந்து மறிச்சிக்கட்டி பூக்குளம் ஊடாக பள்ள கண்டல் அந்தோனியார் ஆலயத்திற்கு செல்லும் பாதையை வழிபாடுகளுக்காக திறந்து விடக் கோரி முள்ளிக்குளம் மக்கள் நேற்று திங்கட்கிழமை (6) காலை முள்ளிக்குளம் பிரதான பாதையில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

பள்ள கண்டன் புனித அந்தோனியார் ஆலயக் கொடியேற்றம் ஜூலை மாதம் 8 ஆம் திகதி இடம்பெற்று தொடர்ந்து நவநாள் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுகின்றமை வழமை.

கடந்த காலங்களில் தொடர்ச்சியாக திருவிழா திருப்பலி இடம்பெற்று வந்த நிலையில் மக்கள் எவ்வித அசௌகரியங்கள் இன்றி குறித்த பாதையூடாக பள்ளங்கண்டல் அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்று வந்தனர்.

இந்த நிலையில் தற்போது மன்னார் முள்ளிக்குளம் இருந்து மறிச்சிக்கட்டி பூக்குளம் வழியாக பள்ள கண்டல் ஆலயத்திற்கு செல்ல வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் அனுமதி மறுத்துள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பாதையூடாக தாம் பள்ள கண்டல் ஆலயத்திற்கு செல்ல 30 கிலோமீற்றர் பயணம் செய்ய வேண்டும். தற்போது தம்மை அநுராதபுரம் பாதையூடாக செல்லுமாறு கூறுவதாகவும் அப்படி சென்றால் 250 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்ட முள்ளிக்குளம் கிராம மக்கள் தெரிவித்தனர்.

அரசாங்கம் குறித்த விடயத்தில் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து முள்ளிக்குளம் கிராம மக்கள் நேற்று (6) திங்கட்கிழமை காலை 11 மணியளவில் முள்ளிக்குளம் பிரதான வீதியில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் ஈடுபட்டனர். (ம-7,285)


**அறை வாடகைக்குண்டு**

கோப்பாய் சந்திக்கருகில் 2 பேர் தங்கக் கூடிய சகல வசதியுடன் கூடிய அறை உள்ளது.
வேலைக்கு செல்பவர்கள் அல்லது பல்கலைக்கழக மாணவர்களுக்கு உகந்ததாக இருக்கும்.
வாடகை பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 721 6689, 076 352 0616**

(7995)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127


Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# ஜூலை - செப்டம்பர் காலத்தில் எல் நினோ தீவிரமடையும்


## உலக வானிலை அமைப்பு இலங்கைக்கு கடும் எச்சரிக்கை

**(வோஷிங்டன்)**

**உலகளாவிய ரீதியில் வெப்பமான காலநிலையை உருவாக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றான "எல் நினோ" காலநிலை நிகழ்வு, ஜூலை முதல் செப்டம்பர் மாத காலப்பகுதியில் மேலும் தீவிர மடையக்கூடும் என உலக வானிலை அமைப்பு எச்சரித்துள்ளது.**

எல் நினோ நிகழ்வுகள் பொதுவாக பலவீனமானது, மிதமானது, தீவிரமானது மற்றும் மிகத் தீவிரமானது என நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. இம்முறை காணப்படும் நிலை மூன்றாவது உச்சக் கட்டமான தீவிர நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மத்திய மற்றும் கிழக்கு பசுபிக் பெருங்கடல் பகுதியில்



கடல் மேற்பரப்பு வெப்பநிலை இயல்பை விட அதிகரிப்பதே "எல் நினோ" என அழைக்கப்படும் இயற்கை காலநிலை மாற்றமாகும்.

இது சாதாரணமாக 2 முதல் 7 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்பட்டு, சுமார் 9 மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை நீடிக்கும் தன்மை கொண்டது.

மூன்றாவது உச்சக் கட்ட நிலை என்பது கடல் வெப்ப நிலை இயல்பை விட 1.5°C முதல் 2.0°C வரை அதிகரித்திருப்பதை குறிக்கிறது என வானிலை நிபுணர்கள் விளக்குகின்றனர்.

இலங்கை போன்ற பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள நாடுகள் இத்தகைய நிலைமைகளால் நேரடி தாக்கங்களை எதிர்கொள்ளும் அபாயம் அதிகமாக உள்ளது.

குறிப்பாக நெல் மற்றும் பிற பயிர்ச்செய்கைகளுக்கு தேவையான மழை குறைவதால், நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டு விளைச்சல் குறையக்கூடும் என எச்சரிக்கப்படுகிறது. அதே வேளை, முக்கிய நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் குறைவதால் நீர்மின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பும் உள்ளது.

மேலும், அதிக வெப்ப நிலை காரணமாக நீர்ச்சத்து குறைதல், சூரிய வெப்பத் தாக்கம் மற்றும் காய்ச்சல் போன்ற உடல்நலப்பிரச்சினைகள் அதிகரிக்கும் அபாயமும் காணப்படுகிறது.

மனித செயற்பாடுகளால் வளிமண்டலத்தில் அதிகரித்து வரும் பசுமை இல்ல வாயுக்கள் இயற்கையான எல் நினோ நிகழ்வுகளின் தீவிரத்தை மேலும் அதிகரிக்கக்கூடும் என சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். (நி)

# தனியார் வைத்தியசாலைகளிலும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

அரச துறை வைத்திய சாலைகளில் மட்டுமன்றி, தனியார் துறை வைத்திய சாலைகள் மற்றும் மருந்தகங்களிலும் தற்போது கடுமையான மருந்துத் தட்டுப்பாடு நிலவி வருவதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத் தியர்களின் தொழிற் சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து வைத்தியர் சமல் சஞ்சீவ நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

தனியார் துறைக்கு மருந்துகளை வழங்கும் பல விநி யோகஸ்தர்கள், தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகார சபையின் கொள்கைகள் மற்றும் பதிவு செய்யும் செயல்முறைகளில் உள்ள குறைபாடுகள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இந்த நிலைமையே தற்போதைய தட்டுப்பாட்டிற்கு முதன்மைக் காரணமாக அமைந்துள்ளதோடு, மருந்து ஒழுங்குமுறை அதிகார சபை சந்தையில் போட்டித் தன்மையுடன் மருந்துகளை விநியோகிப்பதற்குத் தேவையான அதிகளவிலான நிறுவனங்களைப் பதிவு செய்யத் தவறியுள்ளதால் இந்நிலைமை மேலும் தீவிரமடைந்துள்ளது எனத் தெரிவித்தார். (நி)

# டெங்கு மரணங்கள் மேலும் அதிகரிக்கலாம்!

## இக்கட்டான நிலையில் மேல் மாகாண வைத்தியசாலைகள்

(கொழும்பு)

டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளதால், மேல் மாகாணத்திலுள்ள பல வைத்தியசாலைகள் தங்கள் முழு கொள்ளளவை எட்டியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நோய்த்தொற்று பாதிப்புகள் வேகமாக அதிகரித்து வருவது வைத்தியசாலைகள் மீது கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதனால் நோயாளிகளுக்குப் போதுமான சிகிச்சையளிப்பது மிகவும் கடினமாகி வருவதாகவும் வைத்தியர் கபில கன்னங்கரா குறிப்பிட்டுள்ளார்.

தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தால், டெங்கு தொடர்பான உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் அதற்கேற்ப அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார்.

நாட்டில் பதிவாகியுள்ள மொத்தம் 59,638 டெங்கு நோயாளிகளில் 52.4 சதவீதத்தினர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். மேல் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ள 22 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளை அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர். அதேநேரம், டெங்கு காய்ச்சலினால் இது வரையில் 39 மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக குறுகிய நடுத்தர மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை உள்ளடக்கிய மூன்று கட்ட உத்தி முறை தயாரிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், நோய்ப்பரவல் ஒரு இக்கட்டான கட்டத்தை எட்டியுள்ளதாலும், பல வைத்தியசாலைகள் முழு கொள்ளளவிலும் இயங்கி சுகாதாரக் கட்டமைப்பின் மீது பெரும் சுமையை ஏற்படுத்தியுள்ளதாலும், அவசரக்கால குறுகிய கால நடவடிக்கைகளுக்கே தற்போது முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றது.

நோயாளிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தால், உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் அதற்கேற்ப அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (நி)

# பேக்கரி உணவுகளின் விலைகளில் மாற்றமில்லை

## அகில இலங்கை உணவக உரிமையாளர் சங்கம் அறிவிப்பு


(கொழும்பு)

எரிவாயு விலை குறைக்கப்பட்டாலும் பேக்கரி உற்பத்திகளின் விலைகளை குறைக்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் நிறுவனங்கள் எரிவாயு விலைகளைக் குறைத்துள்ளதைத் தொடர்ந்து, உணவகங்களில் விற்கப்படும் சில உணவுப் பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.

பிரைட் ரைஸ், கொத்து, பரோட்டா மற்றும் சிற்றுண்டிகளின் விலைகள் குறைக்கப்படுவதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார்.

எனினும், பாண், பணிஸ் உள்ளிட்ட பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகளை எவ்வகையிலும் குறைக்க முடியாது என அகில இலங்கை



பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

எரிவாயு விலை சிறிய அளவில் குறைக்கப்பட்டதால் பேக்கரி உற்பத்திகளுக்கு எந்தப் பயனும் இல்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# கியூ.ஆர் முறைமை தடையின்றி தொடரும்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள கியூ.ஆர் குறியீடு அடிப்படையிலான எரிபொருள் விநியோக முறைமை எந்தவித தடையுமின்றி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தை நிறுத்துவதற்கு அரசாங்கம் எந்த வித தீர்மானமும் எடுக்கவில்லை என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நாட்டில் எதிர்காலத்திலும் தடையின்றி எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, தற்போதைய விநியோக முறைமையில் மாற்றங்கள் ஏற்படலாம் எனப் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை.

தற்போதைய எரிபொருள் ஒதுக்கீட்டு அளவை அதிகரிப்பதற்கோ அல்லது குறைப்பதற்கோ எந்தவித முடிவுகளும் எடுக்கப்படவில்லை.

மறுஅறிவித்தல் வரை தற்போதைய ஒதுக்கீட்டு எல்லைகளே தொடர்ந்து அமுலில் இருக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## மாகாணமட்ட வலைப்பந்தாட்டம் யாழ்.மாவட்ட அணி சம்பியன்



வடமாகாண விளையாட்டு திணைக்களம் நடத்தும் மாவட்டங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியில் யாழ் மாவட்ட அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வடமாகாண விளையாட்டு திணைக்களம் நடத்தும் மாவட்டங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஓமந்தை உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் நடப்பாண்டு சம்பியனான வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து யாழ் மாவட்ட அணி மோதியது. 4 கால் பகுதி ஆட்டங்களாக நடைபெற்ற ஆட்டத்தில் முதல் இரு கால்பகுதி ஆட்டம் நிறைவடைந்த நிலையில் யாழ் மாவட்ட அணி 14:10, 26:17 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் முன்னிலை வகித்தது.

ஆனால் மூன்றாவது கால் பகுதி யாட்டத்தில் வவுனியா மாவட்ட அணி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி யாழ் மாவட்ட அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது. இதனால் அடுத்த கால் பகுதி ஆட்டத்தில் இரு அணிகளும் பலப்பரீட்சை நடத்தின.

இருப்பினும் ஆட்ட நேர முடிவில் யாழ் மாவட்ட அணி 48:41 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (3-90)

## மகளிர் ரி-20 உலக கிண்ணம்

# இங்கிலாந்தை வீழ்த்தி அவுஸ்திரேலியா சம்பியன்

லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.சி.சி மகளிர் ரி- 20 உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில், இங்கிலாந்து அணியை 7 விக்கெட்டுகளால் வீழ்த்தி அவுஸ்திரேலிய மகளிர் அணி ஏழாவது முறையாக உலகக்கிண்ணத்தைத் தமதாக்கியுள்ளது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் பந்துவீசத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து மகளிர் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவி நாட் ஷிவர்-பிரண்ட் ஆட்டமிழக்காமல் 53 பந்துகளில் 58 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றிருந்தார்.

இதனைத் தொடர்ந்து 151 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ் திரேலிய மகளிர் அணி 17.1 ஓவர்க ளிலேயே 3 விக்கெட்டுகளை மாத் திரம் இழந்து 153 ஓட்டங்களை குவித்து வெற்றி பெற்றது.

அந்த அணி சார்பில் அதிகபட்சமாக பெத் மூனி 64 ஓட்டங்களையும் லிட்ச்ஃபீல்ட் 48 ஓட்டங்களையும் குவித்தனர். (3)



## சர்வதேச கால்பந்து அரங்கிலிருந்து கண்ணீருடன் விடைபெற்றார் நெய்மர்



பிரேசில் கால்பந்து வரலாற்றின் தலைசிறந்த வீரர்களில் ஒருவரான நெய்மர், 2026 பிபா உலகக் கோப்பையில் பிரேசில் அணி நோர்வேயிடம் தோல்வியடைந்து வெளியேறியதை தொடர்ந்து, சர்வதேச கால்பந்து போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

தோல்விக்கு பின் கண்ணீருடன் மைதானத்தில் காணப்பட்ட நெய்மர், சர்வதேச கால்பந்து போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். "நான் முயற்சித்தேன், தொடர்ந்து முயற்சித்தேன், ஆனால் இப்போது எல்லாம் முடிந்துவிட்டது. நான் இங்கேயே தொடங்கினேன், இங்கேயே முடிக்கிறேன்" என்று கூறினார்.

பிரேசில் அணிக்காக 129 போட்டிகளில் விளையாடிய நெய்மர், 80 கோல்களை அடித்து, அந்த நாட்டின் வரலாற்றில் அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற சாதனையுடன் தனது சர்வதேச பயணத்தை முடித்துள்ளார். இதன்மூலம், 16 ஆண்டுகள் நீண்ட அவரது சர்வதேச கால்பந்து பயணம் நிறைவுக்கு வந்துள்ளது.

நோர்வேயிடம் தோல்வியடைந்து உலகக் கோப்பையில் இருந்து பிரேசில் வெளியேறியதால் நெய்மர் மிகவும் வேதனையடைந்தார். இறுதி விசில் ஒலித்தவுடன் மைதானத்திலேயே கண்ணீர் மல்க நின்ற அவர், உணர்ச்சிவசப்பட்டு அழுத காட்சி இரசிகர்களை உருக்கத்தில் ஆழ்த்தியது.

அவரை சக வீரர்கள் ஆறுதல் கூறி தேற்ற முயன்றபோதிலும், உலகக் கோப்பை கனவு நொறுங்கிய ஏமாற்றத்தில் நெய்மர் மனமுடைந்து காணப்பட்டார். (3)

## உலக கிண்ண கால்பந்து

# நோர்வே முன்னேற்றம் பிரேசில் வெளியேற்றம்!

உலக கிண்ண கால்பந்து தொடரின் 16 அணிகளின் சுற்றில், பலம் வாய்ந்த பிரேசில் அணியை 2 - 1 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சி கரமாக வீழ்த்தி நோர்வே அணி காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

நியூயோர்க் நியூ ஜேர்சி மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியின் இறுதி நிமிடங்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

போட்டியின் ஆரம்பம் முதலே இரு அணிகளும் தற்காப்பு மற்றும் தாக்குதல் ஆட்டங்களை மாறி மாறி வெளிப்படுத்திய போதிலும், முதல் பாதியில் இரு அணிகளாலும் கோல் எதனையும் அடிக்க முடியவில்லை.

இதனால் முதல் பாதி ஆட்டம் 0 - 0 என்ற கணக்கில் சமநிலைப் பெற்றது.

இரண்டாம் பாதியில் ஆட்டத்தின் போக்கை மாற்றிய நோர்வே அணியின் நட்சத்திர வீரர் எர்லிங் ஹாலண்ட் 79 ஆவது நிமிடத்தில் அணியின் முதலாவது கோலை அடித்து முன்னிலை பெற்றுக் கொடுத்தார்.

தொடர்ந்து ஆட்டத்தின் 90 ஆவது நிமிடத்தில் அவர் தனது இரண்டாவது கோலையும் அடித்து பிரேசில் அணிக்கு அதிர்ச்சியளித்தார்.

நோர்வே 2 - 0 என முன்னிலையில் இருந்த நிலையில், போட்டி யின் மேலதிக இழப்பீட்டு நேரத்தில் பிரேசில் அணிக்கு பெனால்டி வாய்ப்பு ஒன்று கிடைத்தது.

இதனைச் சாதகமாக்கிக் கொண்ட பிரேசில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் ஒரு கோலை அடித்தார்.

எனினும், போட்டியின் இறுதி வரை பிரேசில் அணியால் ஆட்டத்தைச் சமநிலைப்படுத்த முடியாமல் போனதால், 2 - 1 என்ற கோல் கணக்கில் நோர்வே அணி வரலாற்று வெற்றியைப் பதிவு செய்தது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊழல்வாதிகள் தப்ப முடியாது

## சிறைக்குச் செல்வது உறுதி என்கிறார் பிரதி அமைச்சர்

**(கொழும்பு)**

**“நாட்டில் ஊழல் மற்றும் பாரிய நிதி மோசடிகளில் ஈடுபட்டவர்கள் எவரும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்துவிடவே முடியாது. தவறிழைத்தவர்கள் யார் என்ற பேதமின்றி அவர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்படுவார்கள்” என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேட நிகழ்வொன்றின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, “நாட்டில் ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக பாரபட்சம் பார்க்காமல் சட்ட ரீதியான கடுமையான நடவடிக்கை எடுப்பது தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசின் முதன்மைப் பொறுப்பாகும். இதனைச் சிலர் “அரசியல் பழிவாங்கல்” எனப் பூசி மெழுகப் பார்க்கின்றனர்.

ஆனால், இது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை அல்ல. மாறாக, ஊழலுக்கு எதிராக ஒட்டுமொத்த நாட்டு மக்களும் எமக்கு வழங்கியுள்ள வரலாற்று ஆணைக்கு மதிப்பளித்து, அதனை நடைமுறைப்படுத்தும் தூய்மையான செயற்பாடாகும். எனவே, யார் எந்தவொரு உயர் பதவியில் இருந்தாலும், சட்டத்தின் முன் அனைவரும். சமமானவர்களே.

ஏற்கனவே ஊழல் புரிந்த பலர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இன்னும் பலர் மிக விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டிய நிலை உள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகள், முன்னாள் பிரதமர்கள், முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கு எதிராகப் பாரிய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவர்கள் அனைவருக்கும் எதிரான விசாரணைகள் தற்போதைய சூழலில் உரிய சட்ட நடைமுறைகளுக்கு அமைய மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சிலர் எள்ளிநகையாடும் தொனியில், ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளான அனைவரும் கைது செய்யப்பட்டால் நாட்டில் எதிர்க்கட்சி என்று ஒன்றுமில்லாமல் போய்விடுமா என்று கேள்வி எழுப்புகின்றனர்.

ஆனால், அதற்காகச் சட்டத்தை அமுல்படுத்தும் தார்மீகப் பொறுப்பை அரசாங்கத்தினால் ஒருபோதும் புறக்கணிக்க முடியாது.

யார் தவறு செய்திருந்தாலும், அவர்கள் நாட்டின் பொதுச் சொத்துக்களைச் சூறையாடியதற்குச் சட்டத்தின் முன் பொறுப்புக் கூறியே ஆக வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# போதைப்பொருள் ஒழிப்பு ஒரு நாளில் 900 பேர் கைது



(கொழும்பு)

இலங்கையில் போதைப் பொருள் விநியோகத்தை முற்றாக ஒழித்தல், அதற்கான தேவைகளைக் குறைத்தல், சவால்களை எதிர்கொள்ளல் மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர் வாழ்வளித்தல் ஆகிய தூர நோக்கு திட்டங்களுடன், கடந்த 2025 அக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் “முழு நாடுமே ஒன்றாக” என்ற போதைப் பொருள் ஒழிப்பு விசேட திட்டம் நாடளாவிய ரீதியில் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதற்கமைய, பொலிஸ்மா அதிபரின் நேரடி அறிவுறுத்தலின் கீழ் இலங்கை பொலிஸாரினால் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கைகளின் போது, கடந்த சனிக்கிழமை மாத்திரம் நடத்தப்பட்ட சுற்றி வளைப்புகளில் ஒட்டு மொத்தமாக 900 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து பெருமளவிலான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களில் 3 பேர் நீதிமன்ற தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன், போதைப் பொருளுக்கு அடி மையான 4 சந்தேக நபர்கள் முறையான புனர் வாழ்வு நடவடிக்கைகளுக்காகப் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

# பிரித்தானியாவில் இடம்பெற்ற பொன் அணிகளின் துடுப்பாட்ட சமர்

## யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் அணி வெற்றி



(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் சென் பத்திரிசியர் கல்லூரியின் பிரித்தானிய பழைய மாணவர்களுக்கும் இடையிலான பொன்னணிகளின் 2026 போர் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.


பிரித்தானியாவில் அமைந்துள்ள லண்டன் வெஸ்ட் கறோ மைதானத்தில் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியாக இப் போட்டி இடம்பெற்றிருந்தது.

இதன்போது நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென் பத்திரிசியர் கல்லூரி பழைய மாணவர் அணி களத்தடுப்பினை தேர்வு செய்தது .

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 30 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென் பத்திரிசியர் கல்லூரி அணி 27 ஆவது பந்து பரிமாற்றத்தில் அனைத்து இலக்குகளையும் இழந்து 154 ஓட்டங்களை மாத்திரம் பெற்ற நிலையில் 2026 ஆம் ஆண்டிற்கான பிரித்தானிய பழைய மாணவர்களின் பொன்னணிகளின் போர் துடுப்பாட்ட சுற்று போட்டியினை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி கைப்பற்றியது. (3-30)

# நாட்டின் ஒருமைப்பாடு பாதிக்கப்படும் போது வெறும் பார்வையாளராக இருக்க முடியாது



## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டினதும், பிராந்தியத்தினதும் ஒருமைப்பாடு பாதிக்கப்படும் போது, அதனை மௌனமாக பார்வையிட முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கதிர்காமத்திற்கு வழிபாடுகளுக்குச் சென்றதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்போதைய சூழ்நிலையில் மிக நுட்பமான முறையில் நாட்டில் ஏகாதிபத்தியம் தலைப் பிடிக்கப்படுகிறது

முன்னர் நேரடியாக நாடு ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில், தற்போது, பொருளாதார மற்றும் வர்த்தக சக்திகளைப் பயன்படுத்தி மறைமுக ஆக்கிரமிப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன.

உலக நாடுகள் மாத்திரமின்றி, சர்வதேச நிறுவனங்களும் நாட்டின் தேசிய செயற்றிட்டங்கள் மீது ஆளுகை செலுத்துகின்றன.

எனவே, எந்தவித பாகுபாடும் இன்றி, இந்த ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முகமாலை, வேம்பொடுகேணியில் மீள்குடியேற இதுவரை 29 குடும்பங்கள் விண்ணப்பம்

(கண்டாவளை)

கிளிநொச்சி முகமாலை மற்றும் வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளில் மீள்குடியேறுவதற்கு 29 குடும்பங்களை சேர்ந்த 93 பேர் இதுவரை விண்ணப்பித்துள்ளதாக பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிளாலி தொடக்கம் வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் வரையான பகுதிகளில் கடந்த 1991 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிகளில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த குறித்த பிரதேச மக்கள் இதுவரை முழுமையாக மீள் குடியேற முடியாத நிலை காணப்படுகிறது.

மேற்படி பிரதேசங்கள் யுத்த முன்னரங்க நிலைகளாக காணப்பட்டதுடன் அதிகளவான வெடிபொருள் ஆபத்து நிறைந்த பகுதிகளாகவும் இன்றுவரை காணப்படுகின்றன.

தற்போதுவரை பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள வேம்பொடுகேணி முகமாலை இத்தாவில் போன்ற பகுதிகளில் வெடிபொருள் அகற்றும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் முகமாலை மற்றும் வேம்பொடுகேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 29 குடும்பங்களை சேர்ந்த 93 பேர் மீள்குடியேறுவதற்கான பதிவுகளை மேற்கொண்டு காத்திருப்பதாக பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்தாவில் முகமாலை வேம்பொடுகேணி கிளாலி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தமது சொந்த காணிகளை பராமரிப்பதற்கென 60 பேர் வரையில் விண்ணப்பித்துள்ளதாகவும் பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-315)

# 55 ஆவது காலாட்படை தளபதி கிளி.மாவட்ட அரச அதிபர் சந்திப்பு



(கிளிநொச்சி)

55 ஆவது காலாட்படைப் பிரிவின் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சிடி. சந்தன விக்ரம நாயக்க , கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரனை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது, மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள், அரச திணைக்களங்கள் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கிடையிலான ஒருங்கிணைப்பு, பொதுமக்களின் நலன் மற்றும் எதிர்கால ஒத்துழைப்பு தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. (8)

# போசாக்கு மாதத்தை முன்னிட்டு பருத்தித்துறையில் விழிப்புணர்வு கண்காட்சி



(கரணவாய்)

தேசிய போசாக்கு மாதத்தை முன்னிட்டு பருத்தித் துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் "சிற்றுண்டி களைப் பற்றி மீளச் சிந்திப்போம். இயற்கையான மற்றும் ஆரோக்கியமான சிற்றுண்டிகளைத் தேர்வு செய்வோம்" எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வுக் கண்காட்சி நேற்றைய தினம் பருத்தித்துறை எஸ்.எஸ் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. பருத்தித்துறை மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி திருமதி.சத்தியரூபன் சூரிகா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித் துறை நகர சபைத்தலைவர் வின்சென் டி போல் டக் ளஸ் போல் கலந்து சிறப்பித்தார். (8-60)



மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் ஊடாக 2026 ஆம் ஆண்டுக்கான மாகாணக் கல்வி அமைச்சின் வேலைத்திட்டத்தின் கீழ் மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் புதிய வகுப்பறைக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது . (படம்:- சுபேசன்)

# சாவகச்சேரி ஆயுள்வேத மருத்துவ சேவையை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் நீண்ட காலமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஆயுள்வேத மருத்துவ சேவையை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கு மாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

சாவகச்சேரி மற்றும் சரசாலையில் இயங்கி வந்த ஆயுள் வேத மருத்துவ நிலையம் சுமார் 6 வருடங்களாக இயங்கவில்லை. இதனால் வயோதிபர்கள், சிறுவர்கள்மற்றும்நோயாளர்கள் ஆயுள்வேத மருத்துவ சேவையைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறிப்பிட்ட ஆயுள்வேத மருத்துவ சேவையை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுமக்களின் கோரிக்கைக்கு அமைவாக இது தொடர்பாக தென்மராட்சி அபிவிருத்திக் கழகமானது வடக்கு மாகாண ஆளுநர்மற்றும் சாவகச்சேரி நகரசபையின் கவனத்திற்கு கொண்டுவந்த நிலையில் மாதத்தில் ஒரு தடவை கிளினிக் நடத்துவதற்கு வட மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளரிடம் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் பொருத்தமான இடம் மற்றும் ஏனைய வசதிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# நுணாவிலில் விபத்து இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் ஏ9 வீதியில்நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

ஏ9வீதி ஊடாக பயணித்த கனரக வாகனம் ஒன்று வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகி சடுதியாக நிறுத்தப்பட்ட நிலை யில் பின்னால் வந்த கார் கனரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் மோட்டார் சைக்கிள் மற்றும் காரில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (8-30)

# வவுனியாவில் 'வரலாற்றின் வேர்கள்' விருது வழங்கும் நிகழ்வு



(வவுனியா)

வவுனியா போராளிகள் நலன்புரிச் சமூகத்தின் ஏற்பாட்டில் "சமகாலச் சமூகமும் போராளிகளின் வகிபாகமும்" எனும் தலைப்பில் "வரலாற்றின் வேர்கள்" விருது வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை (05) வவுனியா நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் மா.இளம்பிறை, சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (8-250)

# அறிவோர் ஒன்றுகூடல்

(கொழும்பு)

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் "நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமும் பிரயோகங்களும்" எனும் தொனிப் பொருளில் அறிவோர் ஒன்று கூடல் நாளை புதன் கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் நடைபெறும்.

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர் சட்டத்தரணி ஜெ.தற்பரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பேச்சாளராக சட்டத்தரணி எழில்மொழி இராஜகுலேந்திரா கலந்து கொள்ளவுள்ளார். (8)



மயிலிட்டி வீரமாணிக்கதேவன் துறை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவின் நிறைமணித்திருவிழா(சூரிய வாகனத்திருவிழா) கடந்த சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்:- மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# சிறைச்சாலை மோதலுக்கு அரசாங்கமே பொறுப்பு

## சஜித் பிரேமதாச



(கொழும்பு)


நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட துரதிர்ஷ்டவசமான மோதல் சம்பவத்தில் உயிரிழப்புகள் மற்றும் காயங்கள் ஏற்பட்டமைக்கு சிறைச்சாலை நிர்வாகத்தின் வீழ்ச்சியும் அதன் திறமையின்மையுமே காரணம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்த நெருக்கடி நிலைக்கு தற்போதைய அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சி தலைவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் நிலவரம் குறித்து நேற்று திங்கட்கிழமை விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ள போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (நி)

# தள்ளாடும் வயதிலும் தளராத மன உறுதி

# திருப்பதி மலை ஏறிய 116 வயது மூதாட்டி





(டில்லி)

திருப்பதியில் தரிசனம் செய்வதற்காக, கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த 116 வயது மூதாட்டி ஒருவர் அலிபிரி மலைப்பாதையின் 3,550 படிகளையும் கடந்து சென்று தரிசனம் செய்துள்ளார். குறித்த மூதாட்டி கைத்தடியை மட்டுமே ஊன்றுகோலாகப் பயன்படுத்தியுள்ளார்.

தள்ளாடும் வயதிலும் தளராத மன உறுதியுடன் சுமார் 9 கிலோ மீற்றர் தூரமுள்ள இந்த மலைப் பாதையை அவர் நடந்தே கடந்துள்ளார்.

இந்த மூதாட்டியின் அசாத்திய மன உறுதியையும் பக்தி வைராக்கியத்தையும் கண்டு அங்கு கூடியிருந்த ஏனைய பக்தர்கள் பெரும் நெகிழ்ச்சியடைந்துள்ளனர். (3)

# 1,252 முகாமைத்துவ சேவை அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திற்கு 1,252 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திற்கு 1,252 பேரை இணைத்துக் கொள்வதற்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு, அரச நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தலைமையில், மாகாண சபை கள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் ருவன் செனரத்தின் பங்கேற்புடன் இன்று அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது. (நி)



யாழ்ப்பாணம் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியின் கோரிக்கைக்கு அமைவாக வாகனம் நிறுத்தத்தடை எனும் அடையாளம் பொறிக்கப்பட்ட பலகை அண்மையில் அன்ரா நிறுவனத்தின் அனுசரணையில் J/201 பிரஜா சக்தி தலைவர் பூ.பிரணவனால் பாடசாலைச் சமூகத்திடம் கையளிக்கப்பட்டது.

# தலைவர் கிண்ண உதைபந்தாட்டம் அரையிறுதி ஆட்டங்கள் நாளை!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெற்று வரும் 40 வயதுக்கு மேற்போட்டோர் அணிகளுக்கிடையிலான தலைவர் கிண்ண உதைபந்தாட்ட போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை புதன்கிழமை மாலை இடம்பெற உள்ளது.

கொலின்ஸ்-வல்வை, றேஞ்சர்ஸ்-ஐக்கிய விளையாட்டு கழகம் என்பன அரையிறுதி ஆட்டங்களில் பலப்பரீட்சை நடத்த உள்ளன.

குறித்த போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரை இறுதி ஆட்டதில் குழு ஒன்றில் முதலிடம் பெற்ற கொலின்ஸ் அணியுடன் வல்வை அணியும், மாலை 5.00 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் குழு இரண்டில் முதலிடம் பெற்ற றேஞ்சர்ஸ் அணியுடன் ஐக்கிய விளையாட்டு கழகமும் பலப்பரீட்சை நடத்த உள்ளன.

இவ் ஆட்டங்களில் வெற்றிபெறும் அணிகள் தலைவர் கிண்ணம் 2026 இறுதி போட்டிக்கு தகுதிபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-60)


# வட இலங்கைச் சங்கீத சபை அறிமுறைப் பரீட்சைகள்-2026

18.07.2026,19.07.2026 (சனி, ஞாயிறு) ஆகிய இரு தினங்களும் நடைபெற உள்ள அறிமுறைப் பரீட்சைகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. குறித்த பரீட்சைகள் கீழ் குறிப்பிடப்படும் திகதிகளில் அனுப்பப்பட்ட நேரசூசிக்கு அமைவாக குறித்த பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.

18.07.2026 ஆம் திகதிய பரீட்சை - **25.07.2026** ஆம் திகதியும்,
19.07.2026 ஆம் திகதிய பரீட்சை - **26.07.2026** ஆம் திகதியும் நடைபெறும்.

**மாலதி முகுந்தன்,**
**கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்,**
**தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை.** (6-5981)



# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

## 130,இறாத்தலடி ஒழுங்கை, வட்டாரம் -09

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 09, இறாத்தலடி ஒழுங்கையிலுள்ள இல: 130 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை நாகன் சபாபதி பெண் நாகேஸ்வரி ஆகியவர் குறித்த ஆதனம் தனது காலஞ்சென்ற தாயாராகிய சங்கரன் பெண் கைராசிக்கு சொந்தமாய் இருந்து, நெடுங்காலமாக அவரால் ஆட்சி செய்யப்பட்டு வந்ததாகவும், 1965 ஆம் ஆண்டளவில் அவரது ஏகபுத்திரியாகிய தனக்கு குறித்த ஆதனத்தை வாய்ச்சொல் நன்கொடையாக அளித்திருந்ததாகவும், அன்றிலிருந்து குறித்த ஆதனத்தை தங்குதடையற்றதும், எவருக்குமாறானதும், சுயாதீனதுமாக தானே ஆட்சி செய்து கொண்டு வருவதாகவும், தனக்கு ஆட்சியுரிமை வந்துள்ளதென்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் 7290/17.08.2003ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

சபாபதி சற்குணராசா ஆகியவர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7291/17.08.2003 ஆம் இலக்க உறுதியால் குறித்த நாகன் சபாபதியும் பெண் நாகேஸ்வரியும் ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

செல்வராசா விமலன் ஆகியவர் குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு ச.தவகுணராஜசிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 276/11.03.2020 ஆம் இலக்க உறுதியால் குறித்த சபாபதி சற்குணராசா ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: "வறத்தொல்லை"
இறை: சுழிபுரம் மேற்கு
விஸ்தீரணம்: நில.பர.இலா 2
எல்லைகள்: கிழக்கு- வைரமுத்து வடிவேலுவுக்குரிய ஆதனம், வடக்கு- குருசாமி பொன்னம்பலத்துக்குரிய ஆதனம், மேற்கு - றோட்டு, தெற்கு- மிகுதி ஆதனம்

குறித்த செல்வராசா விமலன் ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்வராசா விமலன் ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.


**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (7993)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மும்பையில் கனமழையால் இடிந்து விழுந்த கட்டடம்

### 5 குழந்தைகள் உட்பட 6 பேர் உயிரிழப்பு




(டில்லி)

நான்கு மாடிக் குடியிருப்பு இடிந்து விழுந்த விபத்தில், 5 குழந்தைகள், ஒரு பெண் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு மும்பையின் மான்கூர்டு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பலியானவர்களில் நான்கு பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

கனமழை காரணமாகவே இந்த நான்கு மாடிக் கட்டடம் இடிந்து விழுந்தது என்றும் விபத்துக்குள்ளான கட்டடம் சட்டவிரோதமாக கட்டப்பட்டது என்றும் உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (3)

## ரஷ்யா - உக்ரைன் போருக்கு முடிவு; மத்தியஸ்தம் செய்ய அமெரிக்கா விருப்பம்



(வோஷிங்டன்)

உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விருப்பம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்துள்ள போர், ஐந்தாவது ஆண்டாக நீடிக்கிறது. கடந்த சில நாட்களால் இரு தரப்பும் மாறி மாறி பெரும் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன.

சில தினங்களுக்கு முன் உக்ரைனின் கீவ் நகரம் மீது ரஷ்யா தொடர் தாக்குதல் நடத்தியது. இதன்படி, 496 ட்ரோன்கள், 74 ஏவுகணைகளை ரஷ்யா செலுத்தியது.

இதில் பல குடியிருப்பு கட்டடங்கள் உள்ளிட்டவை கடுமையாக சேதமடைந்தன. இந்த தாக்குதல்களில், 18 பேர் உயிரிழந்ததாகவும், 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் உக்ரைன் கூறியுள்ளது. இந்த ஆண்டின் மிகப் பெரிய தாக்குதலாக இது தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் உக்ரைன் அமைதி ஒப்பந்தத்திற்கு மத்தியஸ்தம் செய்ய ஜனாதிபதி ட்ரம்ப் முடிவு செய்துள்ளார்.

ட்ரம்ப், ரஷ்ய அதிபர் புடின் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி உடன் தனித்தனியாக தொலைபேசியில் பேசினார். உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டுவர மத்தியஸ்தம் செய்ய உதவுவதற்கான தனது முன்மொழிவை அவர் முன்வைத்தார். புடின் உடன் 90 நிமிடம் தொலைபேசியில் உரையாடிய ட்ரம்ப், மோதலை முடிவுக்குக் கொண்டுவர உதவுவதற்கான தனது விருப்பத்தை மீண்டும் வலியுறுத்தினார்.

அத்துடன் ட்ரம்ப் உடனான உரையாடல் மிகவும் நன்றாக இருந்தது. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர வாய்ப்பு உள்ளது. அமெரிக்காவின் உறுதிப்பாடு மிக முக்கியமானதாக அமையும், என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறினார். இந்நிலையில் போர் நடவடிக்கைகளை விரைவாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், பிரச்சினைகளுக்கு தீர்வுகளை கொண்டு வர உதவத் தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மீண்டும் உறுதிப்படுத்தினார். (3)

## இறுதிச்சடங்கி...

## ஒரே குண்டில்...

### ட்ரம்பின் திமிர்ப் பேச்...

(வோஷிங்டன்)

**ஈரானின் மறைந்த உச்ச தலை... அயதுல்லா அலி கமேனியின் இறு... சடங்கு ஊர்வலத்தில் பங்கேற்று... ஈரான் தலைவர்களை அமெரிக்காவ... ஒரே குண்டில் ஒட்டுமொத்தம... அழித்துவிட முடியும் என்ற ட்ரம்பி... பேச்சுக்கு ஈரான் பதிலடி கொடுத்துள்ள...**

ஆக்சிஸ் ஊடகத்திடம் பேசிய ட்ரம்ப், "ஈரான் மக்கள் கமேனியை வெறுக்கிறார்கள் என்றுதான் நான் நினைத்தேன். ஒருவேளை அவர்கள் அழுவது போலி கண்ணீராக இருக்கலாம்.

கமேனியின் இறுதிச்சடங்குக்காக ஈரான் தலைவர்கள் அனைவரும் ஒரே இடத்தில் கூடியிருக்கிறார்கள். நாங்கள் நினைத்தால் ஒரே குண்டில் அவர்கள் அனைவரையும் காலி செய்ய முடியும். ஆனால், நாங்கள் அதைச் செய்யப்போவதில்லை. ஏனென்றால் அவர்களை அழித்துவிட்டால், அதற்குப் பிறகு பேச்சுவார்த்தை நடத்த அங்கு யாரும் இருக்க மாட்டார்கள்." என தெரிவித்தார்.

மேலும், "நாங்கள் நல்லவர்கள் என்பதால் அவர்களுக்கு ஒரு

## நடுக்கடலில் வடகொரிய... அணுவாயுத சோதனை...



(பியாங்யாங்)

போர்க் கப்பல் மூலம் அணுவாயுதம் உள்ளிட்ட ஆயுதங்களை சுமந்து சென்று தாக்குதல் நடத்தும் நவீன ஏவுகணையை வடகொரியா, வெற்றிகரமாக பரிசோதித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த சோதனையை வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் நேரில் பார்வையிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது:

இதன்படி, சோதனைகளை விரைந்து முடித்து, அடுத்த 2 மாதங்களுக்குள் காங்கோன் என்ற குறித்த புதிய போர்க் கப்பலை கடற்படையில் சேர்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# வெளிநாடு

## ...கிற்கு வந்தவர்களை
## ...் அழித்து விடுவேன்

...பச்சு

...லைவர் ...றுதிச் ...ருள்ள ...வால் ...தமாக ...ம்பின் ...ள்ளது.






வாரம் லீவு கொடுத்திருக்கிறோம்" என்று கிண்டலாகக் குறிப்பிட்டார்.

ட்ரம்பின் இந்த ஆணவப் பேச்சுக்கு, ஆர்மீனியாவில் உள்ள ஈரான் தூதரகம் தனது எக்ஸ் தளத்தில் பதிலடி கொடுத்துள்ளது. அமெரிக்காவின் 250 ஆவது சுதந்திர தினமான ஜூலை 4ஆம் திகதியைக் குறிப்பிட்டு ஈரான் தூதரகம் வெளியிட்ட பதிவில்,

"மனிதர்களைக் கொல்ல முடியும், ஆனால் கொள்கைகளைக் கொல்ல முடியாது. நீங்கள் அயதுல்லா கமேனியைக் கொன்று விட்டதாக நினைக்கிறீர்கள். ஆனால்', உண்மையில் நீங்கள் ஒரு நறுமணப் போத்தலை உடைத்திருக்கிறீர்கள். இப்போது அதன் வாசம் எல்லா இடங்களிலும் பரவத் தொடங்கியுள்ளது. உங்களால் இந்த மக்களின் துக்கத்தைப் புரிந்து கொள்ள முடியாது. ஏனென்றால், அமெரிக்காவுக்கு என்று சொந்தமாக நாகரிகமோ, வரலாறோ அல்லது மானமோ கிடையாது. அதனால்தான் உங்களால் இந்த விடயங்களைப் புரிந்துகொள்ள முடிவதில்லை" என தெரிவித்துள்ளது. (3)

## அமெரிக்காவின் சுதந்திர தின கொண்டாட்டத்தில் அசம்பாவிதம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் 250 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நியூயோர்க் நகரில் உள்ள புகழ்பெற்ற புரூக்ளின் பாலத்தில் கடந்த சனிக்கிழமை பிரமாண்ட வானவேடிக்கை நிகழ்வு நடைபெற்றபோது, அந்த பாலத்தில் திடீரென பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

அப்போது பரவிய தீயில் வானை நோக்கி கரும் புகையும் தீயும் எழுந்த காட்சிகள், தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ளன.

இதன்போது தீயணைப்புக் குழுவினர் சம்பவ இடத்தில் நீண்ட நேர போராட்டத்துக்குப் பின்னர், தீயை கட்டுப்படுத்தியதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வானவேடிக்கை காண்பிக்கப்பட்ட போது பொதுமக்கள் தொலைவில் நிறுத்தப்பட்டிருந்ததால் தீ பரவியபோதும் எந்தவித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## ...ரியா நடத்திய ...னை வெற்றி!

...வேண்டுமென அதிகாரிகளுக்கு கிம் உத்தரவிட்டுள்ளதாக தெரிய வருகிறது.

முன்னதாக, கடந்த மாதம் மற்றொரு 5,000 டன் எடை கொண்ட 'சோ ஹியோன்' என்ற கப்பலை வடகொரியா தனது கடற்படையில் சேர்த்திருந்தது.

இந்த நிலையில், 5,000 டன் எடை கொண்ட காங்கோன் போர்க்கப்பலையும் வடகொரியா தனது கடற்படையில் சேர்க்க சோதனைகளை நடத்தி வருகிறது.

இதேவேளை, எதிர்வரும் 5 ஆண்டுகளில் மூன்று போர்க் கப்பல்களைக் கட்ட வேண்டுமென்று அதிகாரிகளுக்கு கிம் உத்தரவிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (3)

## தந்தையின் உடலைப் பார்த்து கதறி அழுத மகன்கள்

- ஈரானில் தாளாத சோகம்
- 2 கோடி மக்கள் பற்கேற்பு



(டெஹ்ரான்)

அமெரிக்க வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்ட ஈரானின் முன்னாள் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் இறுதிச் சடங்கு டெஹ்ரானில் நடைபெற்று வருகிறது.

இதில் கோடிக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்த டெஹ்ரான் வீதிகளிலும், பெரிய மசூதி வளாகத்திலும் திரண்டுள்ளனர்.

தங்கள் கோபத்தை "அமெரிக்காவுக்கு அழிவு", "ட்ரம்ப்பை வீழ்த்துவோம்" மற்றும் "இஸ்ரேலுக்கு அழிவு' என்று பதாகைகளை ஏந்தி முழக்கமிட்டு வருகின்றனர். இதனிடையே கமேனியின் மூன்று மகன்களான முஸ்தபா, மெசம் மற்றும் மசூத் ஆகியோரும், மூத்த அதிகாரிகளும், இராணுவப் பிரமுகர்களும் டெஹ்ரானில் நடந்த பிரார்த்தனைகளில் கலந்து கொண்டனர்.

இந் நிலையில் தங்கள் தந்தையின் சவப்பெட்டியைக் கண்டதும் மகன்கள் கண்ணீர் விட்டு அழும் காணொளி இணையத்தில் வைரலாகி வருகிறது.

மற்றொரு மகனும் ஈரானின் தற்போதைய உச்ச தலைவருமான மொஜ்தபா காமேனி, பாதுகாப்பு காரணங்களுக்காக இறுதிச் சடங்கில் பங்கேற்கவில்லை.

அத்துடன் அயதுல்லாவுக்கு அஞ்சலி செலுத்த நாடு முழுவதும் இருந்து 2 கோடி பேர் கலந்து கொண்டனர். இது இந்த நூற்றாண்டில் ஒரு தலைவரின் இறுதி நிகழ்வில் உலகின் அதிக மக்கள் கலந்து கொண்ட இறுதி நிகழ்வு என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அதே போன்று உலகின் 100 நாடுகளின் பிரதிநிதிகளும் இந் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வொலிபோல் பீரிமியர் லீக்கிற்கான அணிகள் அறிமுக நிகழ்வு

யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் ஏற்பாடு செய்துள்ள யாழ்ப்பாண வொலி போல் பிரீமியர் லீக்கிற்கான அணிகள் அறிமுக நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை மாலை 5 அணிக்கு ராஜா கீறிம் ஹவுஸ் மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

குறித்த தொடரில் பங்கேற்கும் அணி கள் அதிகாரபூர்வமாக அறிமுகப் படுத்தப் படவிருப்பதனால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட் டாளர்கள் அறிவித்துள்ளனர். (3)

# சாவகச்சேரியில் கைக்குண்டு மீட்பு



சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மட்டுவில் பகுதியில் உள்ள வீட்டுக் காணியொன்றில் இருந்து நேற்று திங்கட்கிழமை கைக்குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இந் நிலையில் அது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாரிடம் தகவல் வழங்கப் பட்டுள்ளது.

அத்திபாரம் வெட்டும் போதே மேற்படி கைக்குண்டு அடையா ளம் காணப்பட்டிருப்பதாக தெரிவிக் கப்படுகின்றது. கைக்குண்டை மீட்பதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெ டுத்து வருகின்றனர். (8-30)

# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1995- இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி-பா-21 1/2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Diploma, Executive Officer
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/17051

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்-ரோகினி
கி-பா-21 1/2
உயரம்:5'7"
தகைமை/தொழில்-BSC, Manager (Doha)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/17052

பிறப்பு:1982-இந்து
நட்சத்திரம்:திருவோணம்
உயரம்:5'4"
தகைமை/தொழில்:O/L, Manager (Australia)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/17053

பிறப்பு: 1997- இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
7இல்செவ்
கி-பா-32
உயரம்:5'3"
தகைமை/தொழில்-A/L, Business (own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/17058

பிறப்பு: 1988- இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
கி-பா- 15
உயரம்:5'6"
தகைமை/தொழில்: CIMA, Accountant(Australia)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: B/17059

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1996 -இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா-44
8இல்செவ்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BA
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/17076

பிறப்பு - 1995 - இந்து
நட்சத்திரம்: பரணி
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Degree, Business(Canada)
எதிர்பார்ப்பு : Only Canada
தொ.இ: G/17082

பிறப்பு-2003 - இந்து
நட்சத்திரம்: மூலம்
7இல்செவ்
கி-பா-36 3/4
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L,Beautician
எதிர்பார்ப்பு : வெளிநாடு
தொ.இ: G/17085

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:ரேவதி
உயரம்-5'2"
தகைமை/தொழில்:MBBS,Doctor
எதிர்பார்ப்பு:உயர்பதவிகள்
தொ.இ: G/17087

பிறப்பு-1997-NRC
நட்சத்திரம்:உத்தரம்
கி.பா: 45
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Diploma,Public Relation Officer(pvt)
எதிர்பார்ப்பு:உத்தியோகம்
தொ.இ: G/17090

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

# இன்று ஒரு தகவல் 610



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மூன்று வித நண்பர்கள்

ஒரு ஊரில் ஒரு மன்னர் இருந்தார். புத்திக் கூர்மையுள்ள ஒரு மன்னர். பொதுவாக மன்னர்களுக்குச் சந்தேகம் வந்தால் சபையில் உள்ள சான்றோர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது தானே வழக்கம்? ஆனால் இங்கே அப்படி அல்ல. மற்றவர்களுக்குச் சந்தேகம் வந்தால் மன்னனிடம் வந்து கேட்டுத் தெரிந்து கொள்வார்கள்.

அது மாதிரி கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக ஒரு பெரியவர் ஒரு நாள் வந்தார். அவர் கையில் மூன்று பொம்மைகள் வைத்திருந்தார்.

மூன்றும் ஒரே மாதிரி பொம்மைகள். கொஞ்சம் கூட வித்தியாசம் தெரியவில்லை. ஏது இந்த பொம்மை? என்று கேட்டார் மன்னர். "எனக்கு வேண்டப்பட்ட ஒருத்தனிடம் மூன்று பொம்மைகள் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொண்டேன். அவன் மிகவும் புத்திசாலி. அவன்தான் இதைச் செய்து கொடுத்தான். ஆனால் அதில் ஒரு சிக்கல்!" என்றார்.

"என்ன பிரச்சினை?" என்று கேட்டார். "நான் அவனிடம் கேட்டது மூன்று விதமான பொம்மைகள். அவன் என்னவென்றால் மூன்றும் ஒரே மாதிரியாக செய்து கொடுத்து விட்டான்!" என்றார். "அவனிடமே கேட்பது தானே?" என்றார். கேட்டேன்.. அவன் என்ன சொல்கிறான் என்றால், இது மூன்றும் ஒரே மாதிரி பொம்மைகள் அல்ல... மூன்றும் மூன்று விதம் ஒன்றுக்கொன்று வித்தியாசம் இருக்கிறது.

இந்த மூன்று பொம்மைகளும் மூன்று விதமான நண்பர்களுக்கு உதாரணங்கள் என்றான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அதுதான் உங்களிடம் வந்தேன்!" என்றார். "சரி.. அந்தப் பொம்மைகளை இப்படிக் கொடுங்கள்" என்று வாங்கினார் மன்னர். எடுத்துக் கொண்டு உள்ளே போனார். கொஞ்ச நேரம் கழித்து வெளியில் வந்தார். பிறகு சொன்னார்.

"அவன் சொன்னது சரிதான்.. மூன்றும் மூன்று விதம் தான். இதோ இருக்கிறதே முதல் பொம்மை, இது உத்தமமான நண்பனுக்கு உதாரணம். இந்த இரண்டாவது பொம்மை இது மத்திமமான நண்பனுக்கு உதாரணம். இந்த மூன்றாவது பொம்மை இருக்கிறதே இது (அதமன்) மோசமான நண்பனுக்கு உதாரணம்! இதைச் செய்தவன் உண்மையிலேயே பெரிய அறிவாளி தான்!" என்றார். வந்தவருக்கு ஒன் றும் புரியவில்லை. பார்த்தால் ஒன்றும் வித்தியாசம் தெரியவில்லையே என்றுஅவர் குழம்பிப் போய் நிற்கிறார்.

இப்போது அந்த மன்னர் விளக்கம் கொடுக்கிறார். அந்த மூன்று பொம்மைகளையும் எடுத்து முன்னே வைத்தார். ஒரு மெல்லிய கம்பியை கையிலே எடுத்தார். அதை முதல் பொம்மையின் காதில் விட்டார். கொஞ்ச தூரம் உள்ளே போய் அப்படியே நின்று விட்டது. அப்புறம் இரண்டாவது பொம்மையின் காதில் கம்பியை விட்டார். அது வாய்வழியாக வெளியே வந்தது. மூன்றாவது பொம்மை காதில் கம்பியைச் செலுத்தினார். அது நேராக இன்னொரு காது வழியாக வெளியில் வந்தது.

முதல் வகை இருக்கிறதே அது மாதிரியான நண்பர்கள் எப்படித் தெரியுமா? நம் கஷ்டத்தை அவர்களிடம் சொன்னால். பேசாமல் கேட்டுக் கொள்வார்கள் வெளியில் அதை யாரிடமும் சொல்ல மாட்டார்கள். வெளியில் தெரியாமல் உதவி செய்வார்கள். செய்து விட்டு அதை நான்தான் செய்தேன் என்று சொல்லிக் கொண்டிருக்க மாட்டார்கள் . அதுதான் கம்பி ஒரு காதுவழியாக போய் உள்ளேயே நின்றது.

இரண்டாவது பொம்மையில் கம்பி ஒரு காது வழியாக போய் வாய் வழியாக வெளியே வருகிறது.இது மாதிரியான நண்பர்களிடம் நம் கஷ்டத்தைச் சொன்னால் அதை அவர்கள் நாலு பேரிடம் சொல்லி நமக்காக உதவி கேட்பார்கள். நமக்கு என்று கேட்டு வாங்கி நமக்குக் கொடுப்பார்கள். இவர்கள் மத்திமமான நண்பர்கள்.

மூன்றாவது பொம்மையில் ஒரு காது வழியாக செலுத்தும் கம்பி இன்னொரு காது வழியாக வெளியில் வந்து விடுகிறது. இது மாதிரியான நண்பர்களிடம் நம் கஷ்டத்தைச் சொன்னால், காது கொடுத்து கேட்பது மாதிரி நடிப்பார்கள். அப்படியே இன்னொரு காது வழியாக வெளியே விட்டு விடுவார்கள். அதைப்பற்றி கவலைப் படமாட்டார்கள். இதுதான் இந்தப் பொம்மைகளுக்குள்ளே இருக்கிற வித்தியாசம்!" என்று விளக்கம் கொடுத்தார் மன்னர்.

படிக்கிற பிள்ளைகளிடமும் இதுமாதிரி மூன்று வகை உண்டு. சில பேர் காதாலே வாங்கி மனதில் வைத்துக் கொள்வார்கள். சிலபேர் காதால் வாங்கி பேனாவால் எழுதுவார்கள். சிலபேர் ஒரு காதாலே வாங்கி இன்னொரு காதால் வெளியில் விட்டு விடுவார்கள். ஒரு பையன், வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்தும் போது தலையை வேகமாக ஆட்டி ஆட்டிக் கேட்பான். "ஏன்டா இப்படி தலையை ஆட்டுகிறாய்" என்று கேட்டான் பக்கத்தில் இருந்தவன். "தலையை ஆட்டினால்தான்டா. ஒரு காது வழியாக உள்ளே போறது இன்னொரு காது வழியா வேகமா வெளியில போகும்!" என்றான் அந்தப் பையன்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அலி கமேனியின் உடல் நான்கு மாதங்களாக எங்கே இருந்தது?



உலக அரசியலில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்திய ஈரானின் முன்னாள் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டு 4 மாதங்கள் ஆகிவிட்ட நிலையில், அவரது இறுதிச் சடங்கு ஊர்வலங்கள் தற்போது தான் தொடங்கியிருக்கின்றன. அமெரிக்கா - இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் கமேனி உயிரிழந்ததைத் தொடர்ந்து, ஈரானில் போர் உச்சகட்டத்தை எட்டியதால் அவரது இறுதிச் சடங்கு தள்ளிவைக்கப்பட்டிருந்தது.

தற்போது அமெரிக்காவுடன் ஏற்பட்டுள்ள தற்காலிகப் போர் நிறுத்த ஒப்பந்தத்தை அடுத்து, கமேனியின் உடலுக்கு பிரமாண்ட அஞ்சலி செலுத்த ஈரான் மக்கள் தயாராகி வருகின்றனர். தலைநகர் டெஹ்ரான் மட்டுமன்றி, ஈரான் மற்றும் ஈராக்கின் முக்கிய 5 நகரங்களுக்கு அவரது உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படவிருக்கின்றது. ஜூலை 9 இல் அவரது சொந்த ஊரான மஷாத் நகரில் உடல் அடக்கம் செய்யப்பட உள்ளது.

**4 மாதங்களாக உடல் எங்கே... எப்படிப் பாதுகாக்கப்பட்டது?**

இஸ்லாமிய முறைப்படி ஒருவர் இறந்த சில நாட்களிலேயே உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதுதான் மரபு. ஆனால், கமேனி பெப்ரவரி மாதமே கொல்லப்பட்டும், 4 மாதங்களாக இறுதிச்சடங்கு நடக்காதது ஏன் என்ற மில்லியன் டொலர் கேள்வி உலக அரங்கில் எழுந்தது.

பொதுவாக இஸ்லாமிய ஷரியத் சட்டங்களின்படி உடலை இரசாயனங்கள் தடவி பதப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அப்படியிருக்க கமேனியின் உடல் எப்படிப் பாதுகாக்கப்பட்டது என்பது பெரும் பேசுபொருளாக இருக்கிறது.

இது குறித்து சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர் டாக்டர் முகமது உமர் விளக்குகையில், "போர்க்காலச் சூழல் போன்ற விதிவிலக்கான அசாதாரண சூழ்நிலைகளில், உடலை அடக்கம் செய்யத் தாமதப்படுத்துவதற்கும், குளிரூட்டப்பட்ட முறையில் உடலைப் பாதுகாப்பதற்கும் ஷியா பிரிவு சட்டங்களில் சில விலக்குகள் உள்ளன. இதன்படி, கமேனியின் உடலுக்கு எந்த இரசாயனமும் பயன்படுத்தாமல், அதிநவீன மிகக் குளிர்ந்த குளிர்பதனக் கிடங்கில் வைத்து உறைநிலையில் 4 மாதங்களாகப் பாதுகாத்துள்ளனர்" என்று குறிப்பிடுகிறார்.

**அரசியல் பின்னணி!**

ஈரானில் மிக நீண்ட காலம் அதிகாரத்தில் இருந்த ஒரு உச்ச தலைவரின் இறுதிச்சடங்கை, சாதாரணப் போர்க்களச் சூழலில் அவசர அவசரமாக நடத்த ஈரான் அரசு விரும்பவில்லை. அமெரிக்காவுடன் ஒரு சுமுகமான தற்காலிகப் போர்நிறுத்தம் ஏற்படும் வரை காத்திருந்து, தற்போது உலக நாடுகளின் முக்கியப் பிரமுகர்கள் மற்றும் லட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் கமேனிக்கு நெஞ்சார்ந்த மிகப்பெரிய பிரியாவிடை கொடுக்க ஈரான் திட்டமிட்டிருக்கிறது.

இஸ்லாமிய சட்ட விதிகளுக்குள் இத்தகைய விலக்குகளைப் பெற்று, 4 மாதங்களுக்குப் பிறகு கமேனியின் இறுதி ஊர்வலத்தை ஈரான் அரசு நடத்துவது சர்வதேச அளவில் பேசுபொருளாக இருக்கிறது.

# யார் இந்த அயதுல்லா அலி கமேனி?

ஈரான் நாட்டில் கடந்த 1979 ஆம் ஆண்டு இஸ்லாமிய புரட்சி நடைபெற்றது. இதன் முன்னர் அயத்துல்லா அலி கமேனி முந்தைய ஆட்சியாளர்களால் சிறையில் அடைக்கப்பட்டு சித்ரவதைகளை அனுபவித்தார்.

1979 இஸ்லாமிய புரட்சிக்கு பின்னர் இஸ்லாமிய குடியரசாக ஈரான் உருவெடுத்தது. அதன் முதல் தலைவராக ருஹோல்லா கோமேனி பதவி வகித்தார்.

1989 ஆம் ஆண்டு அவரது மறைவுக்குப் பின் தேசிய தலைவரான அயத்துல்லா அலி காமேனி தற்போது வரை அந்த பதவியில் இருந்து வந்தார்.

ஈரானின் உயர் தலைவர் பதவி என்பது அந்நாட்டு ஜனாதிபதி பதவியை விடவும் அதிகாரமிக்கதும் வாழ்நாள் முழுவதும் வகிக்கும் பதவியும் ஆகும்.

ஈரானின் மிக வலிமையான இராணுவ அமைப்பான புரட்சிகர பாதுகாப்புப் படையை தனது அதிகாரத்தின் முதுகெலும்பாக மாற்றினார்.

ஏவுகணைத் தயாரிப்பு முதல் நாட்டின் பொருளாதாரம் வரை அனைத்தையும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.

அமெரிக்காவின் நட்புக்காக மற்ற மத்திய கிழக்கு நாடுகள் ஏங்கிக் கிடந்த சூழலில் அணுசக்தி கையிருப்பு மூலம் மத்திய கிழக்கில் தனிப்பெரும் சக்தியாக ஈரானை மாற்றினார்.

லெபனானின் ஹிஸ்புல்லா, ஏமனின் ஹூதிகள் மற்றும் பிற போராளி அமைப்புகளை ஆதரிப்பதன் மூலம் மத்திய கிழக்கில் ஈரானின் செல்வாக்கை நிலைநாட்டினார்.

தங்கள் அணு ஆயுதங்கள் வளர்ச்சி மற்றும் அமைதியின் நிமித்தமே என்று ஈரான் எப்போதும் கூறி வந்தது.

இதற்கு மத்தியில் ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனியில் பழைய சமூக ஊடகப் பதிவுகள் வைரலாகின.

இந்தப் பதிவுகளில் காமேனி, பெண் உரிமை, கவிதைகள் மீதான விருப்பம், பிளாக் லைவ்ஸ் மேட்டர் இயக்கத்திற்கு ஆதரவு, இந்தியப் பிரதமரின் புத்தகத்தைப் படித்தது, மற்றும் சிறுவயதில் தான் எப்படி குறும்புக்காரராக இருந்தார் என்று பலவற்றை குறித்துப் பேசியுள்ளார்.

வைரலானவற்றில் சில பதிவுகள் 10 வருடங்களுக்கும் பழையவை. தற்போது போரை முன்னெடுத்து செல்லும் காமேனியின் முற்றிலும் மாறுபட்ட பிம்பத்தை இந்த பதிவுகள் முன்வைக்கின்றன.

86 வயதான இந்த தலைவரை தீவிர இஸ்லாமிய குடியரசின் மூத்த மதகுரு மட்டுமே என்று தாங்கள் தவறாக மதிப்பிட்டுவிட்டதாகப் பலர் தெரிவிக்கின்றனர்.

பெண்கள் தொடர்பான பல பதிவுகளில், கமேனி பெண்களுக்காக குரல் கொடுத்ததுடன், காதல் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

"ஒரு மனிதன் பெண்ணின் தேவைகளையும் உணர்வுகளையும் புரிந்துகொள்ள பொறுப்புள்ளவன், அவளது உணர்ச்சிபூர்வமான நிலையை புறக்கணிக்கக் கூடாது" என்று அவர் எழுதியுள்ளார்.

இதற்கு எக்ஸ் பயனர் ஒருவர், "காதலனாகப் பிறந்தவர், உச்ச தலைவராக் மாற கட்டாயப்படுத்தப்பட்டவர்" என்று தற்போது கமெண்ட் செய்துள்ளார்.

"பெண் ஒரு மென்மையான மலர், வீட்டு வேலைக்காரி அல்ல. ஒரு பெண்ணை வீட்டில் ஒரு பூவைப் போல நடத்த வேண்டும். ஒரு பூவைப் போல பராமரிக்க வேண்டும்" என்று கமேனி கூறினார்.

ஆனால் இஸ்லாமிய குடியரசான ஈரானில் பெண் உரிமைகள் கட்டுப்படுத்தப்படுவதே கள யதார்த்தமாக உள்ளத்தையும் ஒப்பிட்டு பார்க்க வேண்டி உள்ளது.

2013 ஆம் ஆண்டு ஒரு பதிவில், கமேனி தனது பள்ளிக் காலங்களை நினைவு கூர்ந்துள்ளார். "முதல் நாளில் இருந்தே நான் பள்ளியில் ஒரு சிறப்பு மேலங்கியுடன் சென்றேன். மற்ற குழந்தைகளுக்கும் முன்பாக அதை அணிவது சங்கடமாக இருந்தது, ஆனால் குறும்புத் தனமாகவும் விளையாட்டுத்தனமாகவும் இருப்பதன் மூலம் அதை ஈடுகட்ட முயற்சித்தேன்" என்று எழுதியுள்ளார்.

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் புத்தகத்தைப் படித்து நாட்டின் வரலாற்றைப் புரிந்து கொண்டதாகவும் கமேனி கருத்து தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

1081





அப்படி நிறைவேறாவிட்டால், என்னிடமுள்ள ஜோதிட ஏடுகளையெல்லாம் காவேரி நதியில் எறிந்து விடுகிறேன்! இது என் சபதம்!" என்றார் ஜோதிடர்.

அப்போது ஆழ்வார்க்கடியான், "ஜோதிடரே! உமது ஏடுகளை நீரே எறியும் வரையில் காவேரி மாதா காத்திருக்கவில்லை. அவளே கொண்டுபோய் விட்டாள்!" என்றான்.

ஜோதிடர் அவன் கூறிய தன் உண்மையை உணர்ந்து திகைத்து நின்றார். "ஆயினும், என் ஜோதிடம் பலிக்காமற் போகாது!" என்று தம் வாய்க்குள்ளே முணுமுணுத்துக் கொண்டார்.

**17 ஆம் அத்தியாயம்**
**யானை எறிந்தது!**

சென்ற அத்தியாயங்களில் கூறிய சம்பவங்கள் நடந்த அன்றைக்கு முதல் நாள், நாகைப்பட்டின நகர மாந்தரின் விருந்தினராக இளவரசர் அருள்மொழிவர்மரை நாம் விட்டு விட்டு வந்தோம். விருந்தெல்லாம் முடிந்த பிறகு அலங்கரித்த யானைமீது ஏறி இளவரசர் புறப்பட்டார்.

எண்ணற்ற மக்கள் அவரைத் தொடர்ந்து 'தஞ்சைக்கு வருவோம்' என்று கிளம்பினார்கள். அன்றிரவு இளவரசரும் அவருடன் வந்த ஜனங்களும் திரு ஆரூர் வந்து சேர்ந்தார்கள்.

திருஆரூர் மக்கள் இளவரசர் வருகையை முன்னதாக அறிந்திருந்தபடியால், அவருக்கு இராஜரீக வரவேற்பு அளித்து இராஜோபசாரங்கள் செய்தார்கள். பழம்பெரும் பதியான திருஆரூரின் குணவாசலிலிருந்து குடவாசல் வரையில் மக்கள் திரண்டு நின்றார்கள். நாலு இராஜ வீதிகளும் எள்ளுப் போட்டால் எள்ளு விழாதபடி ஜனக்கூட்டம் நிறைந்திருந்தது. வீடுகளின் முகப்புக்கள் எல்லாம் தோரணங்களினால் அலங்கரிக் கப்பட்டிருந்தன.

திருஆரூர்ச் சோழ மாளிகையையும் அதிகாரிகள் அலங்கரித்திருந்தார்கள். இளவரசருக்கு மட்டுமின்றி அவருடன் வரும் திரளான மக்களுக்கும் விருந்தளிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள்.

முதல் நாளிரவு திருஆரூர் வழியாகவும் கொடும் புயல் சென்றிருந்தது. ஆனால் இளவரசர் வருகையில் உண்டான குதூகல கோலாகலப் புயல், முதல் நாள் அடித்த புயலை அடியோடு மறக்கச் செய்துவிட்டது. வீதிகளிலெல்லாம் வாத்திய முழக்கங்களும், ஆடல் பாடல்களும், குரவைக் கூத்துக்களும், பொம்மை யாட்டங்களும், வீர முழக்கங்களுடன் கூடிய கத்தி விளையாட்டு கழி விளையாட்டுக்களும் நடந்து கொண்டிருந்தன.

தஞ்சாவூர்ச் சோழ குலத்தினர் தில்லையம்பலத்தில் ஆடும் நடராஜப் பெருமானின் கோயிலுக்கு அடுத்தபடியாகத் திருஆரூரில் உள்ள தியாகராஜப் பெருமானின் ஆலயத்தின் மீது விசேஷ பக்தி கொண்டு, ஏராளமான மானியங்கள் அளித்திருந்தார்கள். ஆனால் இளவரசர் அருள்மொழிவர்மர் மட்டும் அதுவரையில் திருஆரூர் வந்ததில்லை.


ஆகையால் கோயிலுக்கு இளவரசர் அவசியம் வரவேண்டுமென்று ஆலயத்தார் வற்புறுத்தினார்கள். இளவரசரும் கோயிலுக்குப் போனார். பல காரணங்களினால் அவருடைய உள்ளம் கொந்தளித்துக் கொண்டிருந்தபடியால் இறைவனுடைய திருக் கோலங்களில் அவருடைய மனம் பூரணமாக ஈடுபட முடியவில்லை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பால் பிடிக்காத பூனை



(நேற்றைய தொடர்ச்சி)

சில மாதங்கள் சென்றன. குறிப்பிட்ட நாளில் அரசாங்கப் பிரமுகர்கள் அனைவரையும் அவரவர் வளர்த்த பூனையுடன் தர்பாருக்கு வரச் சொல்லி அரசர் கட்டளையிட்டார்.

தங்கள் பூனைகளுடன் அனைவரும் தர்பாருக்கு வந்தனர். தெனாலி ராமனும் தன் வீட்டுப் பூனையுடன் வந்தான். மற்றவர்கள் வளர்த்த பூனைகள் எல்லாம் கொழு கொழுவென இருக்க, தெனாலி ராமனின் பூனை ஒல்லியாக நோஞ்சானாக இருந்ததைக் கண்டு அவையினர் சிரித்தனர்.

மன்னர் தர்பாருக்கு வந்ததும் எல்லோருடைய பூனைகளையும் பார்த்தார். தெனாலிராமன் கையிலிருந்த பூனையையும் பார்த்தார்.

மன்னர் : ராமா ஏன் இப்படி பூனையை ஒல்லியாக வைத்திருக்கிறாய் ?

ராமன் : அரசே என்ன செய்வது ? இந்தப் பூனைக்கு பாலே பிடிக்காது.

மன்னர் : என்ன உளறுகிறாய் ? பால் வேண்டாத பூனையும் உலகில் உண்டா?

ராமன் : வேண்டுமானால் தாங்களே சோதித்துப் பாருங்களேன்

மன்னர் : யாரங்கே ? ஒரு பாத்திரத்தில் பால் கொண்டு வா ஒரு காவலன் ஒரு பாத்திரத்தில் பாலைக் கொண்டு வந்து வைத்தான். ராமன் கையிலிருந்த பூனையைக் கீழே இறக்கி விட்டான். பூனை பாலைக் கண்டதும் கத்திக் கொண்டே ஒதுங்கிப் போய் நின்றது.

மன்னர் : ராமா என்ன செய்தாய் ? ஏன் இந்த பூனை இப்படி ?

ராமன் , பூனைக்குப் பால் பிடிக்கமால் போக அவன் பயன்படுத்திய உத்தியை விவரித்தான். மன்னர் சிரித்தார். அவையினரும் சிரித்தனர். 'உன்னுடைய நகைச்சுவை உணர்வுடன் கூடிய சாமர்த்தியத்திற்கு என்னுடைய பாராட்டுகள்' என்று சொன்ன மன்னர் , தமது விரலிலிருந்த வைர மோதிரத்தைக் கழற்றி ராமனிடம் கொடுத்தார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னுஞ் செருக்கு.

~ திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## துரியோதனனிடமும் நல்ல குணம் இருந்தது

பாண்டவர்கள் - கௌரவர்கள் என்ற இரு தரப்பில் பாண்டவர்கள் என்றதும் அவர்கள் நல்லவர்கள் என்ற மனநிலை நம்மிடம் இயல்பாக ஏற்பட்டு விடும்.

அதே நேரம் கௌரவர்கள் என்றால், அவர்கள் தீயவர்கள். அவர்களிடம் அறம் இல்லை. நீதி நியாயம் இல்லை என்பதாக நாம் நினைந்து கொள்வோம்.

இங்கு மகாபாரதம் எனும் இதிகாசம் அவ்வாறானதொரு நினைப்பை நம்மிடம் உருவகப்படுத்தி நிற்கிறது.

ஆம், தருமபிரான் உள்ளிட்ட பாண்டவர்கள் அறத்தின் பாற்பட்டவர்களாக இருக்கும்போது, துரியோதனன் உள்ளிட்ட கௌரவர்கள் அதர்மத்தின் பாற்பட்டவர்களாகத் தெரிகின்றனர்.

இங்கு துரியோதனன் அதர்மத்தின் பாற்பட்டவனாக இருந்தாலும் அவனிடமும் சில சந்தர்ப்பங்களில் நல்ல குணம் வெளிப்பட்டுள்ளது என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், ஓர் இடத்தில் கர்ணன் அரச வம்சத்தவன் அல்ல என்ற வாதம் எழுகிறது. இந்த இடத்தில் சூரியபுத்திரன் கர்ணன் அநாதையாக நிற்கிறான். அவ்வாறாயின் அவனின் நிலைமை எத்துணை பரிதாபமானது. இங்குதான் உற்ற நேரத்தில் துரியோதனன் கர்ணனுக்கு உதவுகின்றான்.

மன்னர்களே! கர்ணனை அங்கதேசத்தின் அரசனாக்குகின்றேன் என அப்பெரும் சபைதனில் துரியோதனன் அறிவிக்கின்றான்.

ஆகா! கொடைக்குப் பேர் போன கர்ணனுக்கே கொடை கொடுத்தவன் துரியோதனன் என்றால், துரியோதனனிடமும் நல்ல குணம் இருந்ததென நாம் கூறுவதில் தவறில்லையல்லவா?

இங்கு இதை நாம் கூறும் போது என்ன? துரியோதனன் பக்கம் ஆதரவு நகர்கிறது என்று நீங்கள் கேட்கலாம்.

எல்லாம் காரணத்தோடுதான். அதாவது, இலங்கை அரசியலில் விமல் வீரவன்ச தமிழர்களின் விரோதியானவர். அதேநேரம் சிங்கள மக்களுக்கும் அவர் நன்மை பயப்பவர் அல்ல.

நிலைமை இதுவாக இருக்க, அவர் கடந்த ஒருசில தினங்களுக்கு முன்னர் ஒரு தகவலை வெளியிட்டுள்ளார்.

அதாவது, வடக்கு கிழக்கில் மட்டும் மாகாண சபைத் தேர்தலை நடத்தி, அதற்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்பதுதான் அவர் கூறிய தகவல்.

இங்கு அவர் கூறியது போல, அநுர அரசாங்கம் அப்படி எதுவும் நினைக்கவில்லை. ஆனால் விமல் வீரவன்ச கூறிய மேற்போந்த தகவலை உள்ளவாறு நடைமுறைப்படுத்துவது தக்கது போலத் தெரிகிறது.

ஆம், யாரும் நினைத்திராத ஒரு நல்ல விடயத்தை விமல் வீரவன்ச முன்வைத்துள்ளார்.

அரசாங்கம் தொடர்பில் சிங்கள மக்களிடம் எதிர்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில்; விமல் வீரவன்ச மேற்போந்த கருத்தினைக் கூறியிருந்தாலும் அதனை அப்படியே நடைமுறைப்படுத்துவது பற்றி அரசாங்கம் சிந்திப்பது நன்மை பயக்கும்.

கூடவே விமல் வீரவன்ச கூறியதை நடைமுறைப்படுத்துமாறு தமிழ்த் தரப்புகளும் அரசாங்கத்திடம் கேட்பது பொருத்துடையது.

இங்குதான் தீயரிலும் நன்மை உண்டென்பதை நாம் உணர முடிகிறது.

# வறட்சி, பெருமழை, கடும் பஞ்சம் என விஸ்வரூபம் எடுக்கப்போகும் எல்நினோ

## எதிர்வினையாற்ற தயாராகிறது அரசாங்கம்

(கொழும்பு)

எல் நினோ நிலைமையானது இலங்கையின் பருவமழைக் காலங்களுக்கு ஏற்ப வெவ்வேறு வடிவங்களில் தனது தாக்கத்தை ஏற்படுத்தவுள்ளதுடன் நாட்டிற்கு கடுமையான சவாலாக அமையவுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் விஜேமான்னகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை (06) அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையை பொறுத்தவரையில் தற்போது தென்மேற்கு பருவமழைக் காலத்தின் மழைவீழ்ச்சியை இந்த எல்நினோ நிலைமை கணிசமாகக் குறைக்கும் என்பதால் நடப்பு ஜுலை மாதத்தின் இறுதிப் பகுதியும் அதனைத் தொடர்ந்து வரும் ஆகஸ்ட் மாதமும் செப்ரெம்பரின் ஆரம்பப் பகுதியும் மிகவும் வறட்சியான காலநிலை நிலவக்கூடும்.

வழக்கமாக இக்காலப் பகுதியில் பெய்யும் 200 முதல் 240 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி இம்முறை பெருமளவில் குறையும் சாத்தியம் உள்ள போதிலும் செப்ரெம்பர் மாதம் இறுதியில் பசுபிக் பெருங்கடல் பிராந்தியத்தில் பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேசியாவை ஒட்டி உருவாகக்கூடிய சூறாவளி அல்லது காற்றழுத்த தாழ்வு நிலைமைகள் காரணமாக தென்மேற்கு பருவமழை தற்காலிகமாக தீவிரமடைந்து ஓரளவு மழை கிடைக்க வாய்ப்புள்ளது.

மேலும் கடந்த 75 ஆண்டு கால வானிலை தரவுகளின்படி இலங்கையை 28 எல்நினோ தாக்கியுள்ள நிலையில் அதில் 1982, 1983, 1997, 1998 மற்றும் 2015, 2016 ஆகிய ஆண்டுகளில் பதிவான 3 அதி தீவிர எல்நினோ நிலைமைகளின் போது ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் இலங்கைக்கு வழக்கத்தை விட கூடுதலான மழை கிடைத்துள்ளது.

இதனடிப்படையில், எதிர்வரும் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் அதிதீவிரமான கனமழை பெய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கனமழை டிசம்பர் மாதம் வரை நீடிக்க கூடும்.

எனினும் இந்த எல்நினோ நிலைமை மேலும் தீவிரமடைந்து அதிவலுவான நிலையை எட்டும் போது அதன் நேரடித் தாக்கம் அடுத்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் முற்றாக மழைவீழ்ச்சி குறைவடைந்து கடுமையான வறட்சி நிலைமை ஒன்று தோன்றும்.

எனவே கிடைக்கக் கூடிய கனமழையை சேமித்து அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் வரவிருக்கும் நீண்டகால வறட்சி மற்றும் சவால்களுக்கு முகங்கொடுக்க நாட்டின் அனைத்து பொது மக்களும் தயாராக இருக்க வேண்டும் என்றார். (ம-7)

# வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள்

## யாழில் திறந்த கலந்துரையாடலுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளின் தரவு சேகரிப்பும் அரசியல்வாதிகள், சமூக செயற்பாட்டாளர்களுடனான திறந்த கலந்துரையாடலும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணியளவில் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளதாக வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜேம்ஸ் கபிலன் போல் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பான சரியான தகவல்கள், தரவுகள் இதுவரையில் இல்லை. நாம் வேலைவாய்ப்புக்களை கோரும் போது தரவுகள் கைவசம் இருந்தாலே, வேலைவாய்ப்பை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.

செப்ரெம்பர் மாதமளவில் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களுக்கான ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. அது போட்டி பரீட்சை இன்றி நடைபெறவுள்ளதாகவும் அறிகிறோம். எனவே பட்டதாரிகள் பட்டப்படிப்பினை முடித்து வெளியேறிய ஆண்டு, அவர்களின் துறை சார்ந்த தரவுகள் கைவசம் இருந்தாலே வேலை வாய்ப்பினை சிக்கல் இன்றிப் பெற்றுக்கொள்ள முடியும்.

தனியார் துறையிலும் பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. சரியான தரவுகள் இல்லாததால் சரியானவர்களை இனம் கண்டு அந்த வேலை வாய்ப்பினை அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

அத்துடன் எதிர்காலத்தில் வடமாகாண அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் ஊடாக சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான வேலை வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன. பட்டதாரிகள் தொடர்பிலான தரவுகள் இருந்தாலே அவர்கள் சார்பான துறைக்கு வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தந்தை செல்வா கலையரங்குக்கு நேரில் வந்து தமது பட்டப்படிப்பு தொடர்பிலான விபரங்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதேவேளை, வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பிலும் நாம் வேலை கேட்டு போராட்டங்கள் நடத்தும் போது சமூக வலைத்தளங்கள் உள்ளிட்டவற்றில் பல்வேறு கருத்துக்களை முன்வைப்போர். அன்றைய தினம் தந்தை செல்வா கலையரங்குக்கு வருகை தந்து எம்முடன் திறந்த கலந்துரையாடலில் ஈடுபடுங்கள் என்றார். (ம-7)

# பாதாள உலக உறுப்பினர் நாட்டிலிருந்து தப்ப உடந்தை

## உயர் அதிகாரி அதிரடிக் கைது

பாதாள உலகக் குற்றவாளி ஒருவர் நாட்டிலிருந்து தப்பிக்க போலி வெளிநாட்டு கடவுச்சீட்டு தயாரிப்பதற்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிரதி கட்டுப்பாட்டாளர் நேற்றையதினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னையிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட 'கேஹெல்பத்தர பத்மே' என அழைக்கப்படும் ஹேவா பேதிகே தினுக சதுரங்க எனும் பாதாள உலகக் குற்றக் கும்பல் உறுப்பினரின் புகைப்படத்திற்குப் பதிலாக வேறொரு நபரின் விபரங்கள் இணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை எவ்வித உரிய பரிசோதனையுமின்றி ஏற்றுக் கொண்டு கடவுச்சீட்டு வழங்கியதன் மூலம் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தின் 45(2) (1) ஆவது பிரிவின் கீழ் இவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# 3,300 ற்கும் அதிகமானோரை பலி கொண்ட நிலநடுக்கம்

கடந்த மாதம் வெனிசுலாவில் ஏற்பட்ட நிலநடுக்கங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3,300 ஐக் கடந்துள்ளது.

இதேவேளை இதுவரை நிலநடுக்கத்தில் உயிரிழந்த 3,342 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 41,000 ற்கும் மேற்பட்டோர் காணாமல்போயுள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலநடுக்கங்களால் காயமடைந்த 16,000 ற்கும் மேற்பட்டோர் தற்போதும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுவான போராட்டத்தின் மூலமே வாழ்வாதாரத்தை வென்றெடுக்கலாம்

## புபுது ஜயகொட அழைப்பு



(கொழும்பு)

மக்களை ஒன்றிணைத்து, வலுவான மக்கள் போராட்டமொன்றை முன்னெடுப்பதன் மூலமே எமது போக்குவரத்து உரிமைகளையும் வாழ்வாதாரத்தையும் வென்றெடுக்க முடியும் என முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.

பேருந்து கட்டண அதிகரிப்பைக் கண்டித்து நேற்று திங்கட்கிழமை விடுத்த விசேட காணொளியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டீசல் விலை 25 ரூபாவால் குறைக்கப்பட்ட சில நாட்களிலேயே சாதாரண பேருந்துக் கட்டணங்கள் 12 சதவீதத்தாலும், நீண்டதூர பேருந்துக் கட்டணங்கள் 20 சதவீதத்தாலும் உயர்த்தப்பட்டிருப்பது நியாயமற்றது.

இலங்கையில் கார்பன் உமிழ்வில் 46 சதவீதம் வாகனப்புகையால் ஏற்படுவதாகவும், நாட்டின் பயணிகளில் 65 சதவீதம் பேர் தனிப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்துவதால் எரிபொருள் நுகர்வும் போக்குவரத்து நெரிசலும் அதிகரித்துள்ளது.

மத்திய வங்கித்தரவுகளின்படி, நாட்டின் இறக்குமதி செலவினத்தில் 20 சதவீதம் எரிபொருளுக்காகவே செலவிடப்படுகிறது. அதில் 63 சதவீதம் போக்குவரத்துத்துறைக்குப் பயன்படுத்தப்படுகிறது.

பேருந்துக்கட்டண உயர்வால் குடும்பங்களின் மாதாந்த போக்குவரத்துச் செலவுகள் மேலும் அதிகரித்து, உணவுக்காக ஒதுக்கப்படும் தொகை குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பொதுப்போக்குவரத்தை வலுப்படுத்துவதே இதற்கான ஒரே தீர்வாகும். பொதுப் போக்குவரத்துக்கான ஒதுக்கீடுகளை அதிகரிப்பதுடன், பொதுப் போக்குவரத்து மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் போக்குவரத்துக்கான எரிபொருளுக்கு வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும்.

2026 வரவுசெலவுத் திட்டத்தில் பொதுப் போக்குவரத்துக்காக 67.2 பில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், வீதி அபிவிருத்திக்காக 342 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. குறைந்த பட்சம் 200 பில்லியன் ரூபாவையாவது பொதுப் போக்குவரத்து மேம்பாட்டுக்காக ஒதுக்க வேண்டும்.

விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு சலுகை விலையில் எரிபொருள் வழங்கியிருந்தால் தற்போதைய பல பொருளாதார சிக்கல்களைத் தவிர்த்திருக்க முடிந்திருக்கும். கடந்த பல தசாப்தங்களாக ஆட்சியில் இருந்த அரசியல் தரப்புகள் ஒரே பொருளாதாரக் கொள்கைகளையே பின்பற்றி வந்துள்ளனர்.

எனவே, பயணிகள் சங்கங்கள் உள்ளிட்ட பொதுமக்களை ஒன்றிணைத்து வலுவான மக்கள் போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலமே மக்களின் போக்குவரத்து உரிமைகளையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க முடியும் என அவர் தெரிவித்தார். (ந)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 200 | 280 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 320 | 200 | -- | 220 | -- | 370 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 600 | 550 | 600 | 500 | 680 |
| தக்காளி | 400 | 400 | 500 | 620 | 400 | 400 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 200 | 150 | 250 | 200 | 140 |
| கோவா | 200 | 250 | 300 | 250 | 250 | 200 | 150 |
| கரட் | 400 | 400 | 400 | 380 | 400 | 400 | 320 |
| பூசணி | 150 | 180 | 150 | 150 | 200 | 180 | 130 |
| புடோல் | 120 | 200 | 200 | 200 | 250 | 140 | 150 |
| வாழைக்காய் | 150 | 150 | 100 | 150 | 200 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 300 | 400 | 400 | 200 | 380 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 200 | -- | 200 | 200 | -- |
| பாகற்காய் | 800 | 1000 | 1500 | 800 | 1000 | 800 | -- |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 200 | 400 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 300 | 400 | 400 | -- | 350 |
| பயற்றங்காய் | 350 | 250 | 200 | 350 | 300 | 300 | 150 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 350 | 300 | 320 | 270 |
| பீற்றூட் | 350 | 450 | 500 | 400 | 400 | 400 | 450 |
| கறிமிளகாய் | 600 | 500 | 450 | 500 | 400 | 400 | 350 |
| முருங்கைக்காய் | 450 | 450 | 500 | 350 | 450 | 400 | 500 |
| போஞ்சி | 650 | 500 | 600 | 600 | 500 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 200 | -- | 250 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 100 | 80 | 80 | -- | 60 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 300 | 500 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 130 | 100 | 110 | 100-140 | -- | 90 |
| இராசவள்ளி | 400 | 400 | 400 | 350 | 350 | -- | 300 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 400 | 300 | 480 | -- | -- |
| முள்ளங்கி | 250 | 160 | 200 | 180 | 300 | 200 | 220 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 100 | -- | 100 | -- | 60 |
| ஈரப்பலா | 250 | 200 | 100 | -- | 280 | -- | -- |

# இராசிபலன்

07.07.2026
ஆனி 23, செவ்வாய்க்கிழமை
சப்தமி முற்பகல் 9.28 மணிவரை

உத்தரட்டாதி பிற்பகல் -1.10 மணிவரை
சுப நேரம் -10.28-11.58 மணிவரை
இராகு காலம் -2.58-4.28 மணிவரை
அமிர்த சித்தம்,கூட்டுறவாளர் தினம்,

சந்திராஷ்டமம்- பூரம்,உத்தரம்.

வளவன்



மேஷம்

வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.



கடகம்

பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.



துலாம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.



மகரம்

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும்.



ரிஷபம்

பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக் கும், வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.



சிம்மம்

எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணமலும் இருப்பீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



விருச்சிகம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.



கும்பம்

எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், ஆரோக்கயத்தில் கவனம் தேவை, வார்த்தைகளில் நிதானம் தேவை.



மிதுனம்

வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.



கன்னி

தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



தனுசு

தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு.



மீனம்

பொருளாதார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.

அன்புத் தீயால் அனைத்துத் தீயையும் அணைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## அமைதியை...

மேற்கொண்டதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாளருமான ஏ.சி.கஜநாயக்க தெரிவித்தார்.

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் நேற்று உரையாற்றிய அவர்,

இன்று (நேற்று) காலை கைதிகளின் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து இந்த வன்முறை வெடித்தது.

சண்டையைத் தடுக்க முயன்ற சிறை அதிகாரிகள் தாக்கப்பட்டதுடன், சிறையின் பிரதான நுழைவாயிலை நோக்கி விரட்டப்பட்டனர்.

சில கைதிகள் சிறையின் பிரதான வாயிலை உடைத்துக்கொண்டு வெளியேற முயன்றனர்.

இதனால் அதிகாரிகள் குறைந்த பட்ச பலப்பிரயோகத்தைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. சிறைச்சாலையின் ஆடவர் பிரிவில் உள்ள இரு எதிர் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து, சிறை அதிகாரிகள் கைதிகளுக்குக் காலை உணவை வழங்கிக் கொண்டிருந்தபோது இந்த மோதல் தொடங்கியது.

இந்த வன்முறையில் பல சிறை அதிகாரிகளும் கைதிகளும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். சிறைக்குள் பதற்றம் நீடித்தாலும், அதிகாரிகள் பிரதான நுழைவாயிலின் கட்டுப்பாட்டை மீண்டும் தங்கள் வசப்படுத்தியதோடு, நிலைமையை பெரும்பாலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

அங்கு கூடுதல் பாதுகாப்புப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றார். (ம-7)

## விசாரணைக்கு...

ஒப்புதல் அளித்துள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது சம்பவம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதன் பின்னர் இந்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், நீர்கொழும்பு சிறைச்சாலையில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவம் குறித்து முறையான மற்றும் விரிவான விசாரணை நடத்தி, சம்பவத்திற்கான காரணங்கள், இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக குறித்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ இக்குழுவின் தலைவராகவும் ஓய்வுபெற்ற மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், ஜனாதிபதி சட்டத்தரணி மிலிந்த குணதிலக்க மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி மொகான் வீரக்கோன் ஆகியோர் மற்றைய உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தின் அனைத்து விடயங்களையும் விரிவாக விசாரித்து, தனது பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கையை அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்க இக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## சிறைக்கலவரத்...

வம் தொடர்பில் தான் ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளதாக நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சராக இந்தச் சம்பவத்திற்குத் தான் பொறுப்பேற்பதாக தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர், சிறைச்சாலையில் தற்போதைய நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். இருப்பினும், மனித உயிர்கள் இழக்கப்பட்டதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது என்றும் குறிப்பிட்டார்.

"உயிரிழப்புகள் குறித்து நான் ஆழ்ந்த கவலையடைகிறேன். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது இதயபூர்வமான இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து அதிகாரிகள் முழுமையான விசாரணைகளை மேற்கொள்வார்கள் என்றும் இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

யார் மீதும் பழி சுமத்துவதைவிட, உண்மைகளைக் கண்டறிவதிலும், இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாமல் தடுப்பதிலுமே தனது கவனம் இருப்பதாக அவர் மேலும் வலியுறுத்தினார். (ம-7)

## 700 கைதிகள்...

700 கைதிகளை உடனடியாக வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கமைய குறித்த கைதிகள் தும்பர, அநுராதபுரம் மற்றும் அங்குணகொலபெலஸ்ஸ ஆகிய சிறைச்சாலைகளுக்கு மாற்றி அனுப்பப்பட்டுள்ளனர். (ம-7)

## சாவகச்சேரி...

வீசினார் எனும் குற்றச்சாட்டில் நகர சபையின் உப தவிசாளர், வடமாகாண ஆளுநரால் கடந்த 24 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக உபதவிசாளர் பதவி மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர் பதவி ஆகியவை வறிதாக்கப்பட்டது.

இந் நிலையில் ஆளுநரின் வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்ய வேண்டும் எனவும் வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்காலத் தடையுத்தரவு வழங்கக் கோரியும் சாவகச்சேரி நகர சபை முன்னாள் உபதவிசாளர் சார்பில் மன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மனு மீதான விசாரணை நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்காலத் தடை வழங்க மறுத்த நீதிமன்று, எதிர் மனுதாரர்களுக்கு அழைப்புக் கட்டளை வழங்க கட்டளையிட்டுள்ளதுடன், வழக்கினை மன்று ஒத்திவைத்துள்ளது. (ம-7)

## கடமை நேரத்தில்...

மன்னார் இரணை இலுப்பைக் குளம் அ.த.க.பாடசாலை அதிபர் ந. கோபு (வயது-41) கடமை நேரத்தில் உயிரிழந்துள்ளார்.

பாடசாலையில் கடமையில் இருந்த வேளை நெஞ்சுவலி ஏற்பட்ட நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127












































Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நீர்கொழும்பு...

நீர்கொழும்பு சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் இரு குழுக்களுக்கிடையே நேற்று முன்தினம் (05) பிற்பகல் ஒரு மணியளவில் மோதல் ஏற்பட்டது. விளக்கமறியலில் உள்ள கைதிகள் மற்றும் தண்டனை பெற்று சிறையிலடைக்கப்பட்டுள்ள கைதிகள் ஆகிய இரு தரப்பினருக்கு இடையிலேயே இந்த மோதல் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த மோதலில் 2 கைதிகள் உயிரிழந்ததுடன் 38 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலைமையைத் தொடர்ந்து நேற்றுக் காலை சிறைச்சாலையின் சூழல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தாலும் நேற்று (6) மீண்டும் அங்கு அமைதியற்ற நிலை ஏற்பட்டது.

நேற்றுக் காலை தீவிரமடைந்த மோதலில் 7 அதிகாரிகள் உட்பட 27 பேர் உயிரிழந்தனர்.

மேலும், இந்த மோதல் காரணமாக 100 க்கும் மேற்பட்டோர் காயமடைந்து நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலத்த காயமடைந்த 13 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர், சிறைச்சாலைகள் ஆணையாளர் ஏ.சி. கஜநாயக்க ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

நேற்றுக் காலை கைதிகளுக்கு உணவு வழங்கும் போது மீண்டும் மோதல் ஏற்பட்டதாகவும் அதைக் கட்டுப்படுத்தச் சென்ற சிறைச்சாலை அதிகாரிகள் மீது கைதிகள் தாக்குதல் நடத்தியதாகவும் கூறினார். அதிகாரிகள் பிரதான நுழைவாயிலை நோக்கி ஓடியபோது, கைதிகள் அவர்களைத் துரத்திச் சென்று தாக்கியுள்ளனர். இந்த மோதல், "பூரு மூனா" என்ற பாதாள உலகக்குழு உறுப்பினருடன் நெருங்கிய தொடர்புடைய போதைப் பொருள் கடத்தல்காரரான "சுரேஷ்" என்பவரால் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பான தகவல் கொடுத்ததாலேயே இந்த மோதல் வெடித்ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, நீர்கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சிறைச்சாலை வளாகத்திற்கு அழைக்கப்பட்டனர். நீர்கொழும்பு சிறைச்சாலை, குறுகிய கால கைதிகள் மற்றும் விளக்கமறியல் சந்தேக நபர்கள் என இரு தரப்பினரும் தடுத்து வைக்கப்படும் இடமாகும். அங்கு சுமார் 1,800 கைதிகள் உள்ளனர்.

சிறைச்சாலைக்குள் இருந்த இரண்டு எதிர்ப்புக் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட இந்த மோதலின் போது, விசேட அறைகளின் பூட்டுகளை உடைத்து, அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறப்புக் கைதிகள் மீதும் வன்முறையில் ஈடுபட்ட கைதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். மேலும் போதைக்காக சிறைச்சாலை மருந்தகத்தை உடைத்து, அங்குள்ள வலி நிவாரணிகளை அதிகளவில் அருந்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் உள்ள பெண் கைதிகள் கூரையின் மீது ஏறி போராட்டத்தில் ஈடுபட்டனர். மோதலில் ஈடுபட்ட தரப்பினருக்கு ஆதரவாகவே அவர்கள் போராடியதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதற்கிடையில், கைதிகள் குறித்த தகவல்களை அதிகாரிகள் வழங்கவில்லை என்று குற்றம்சாட்டி, சிறைச்சாலைக்கு முன்னால் வந்த கைதிகளின் உறவினர்கள் குழப்பத்தில் ஈடுபட்டனர். பின்னர் பொலிஸாரின் தலையீட்டுடன், காயமடைந்த கைதிகளின் உடல்நலனைப் பார்க்கச் சில உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

நேற்று காலை 10 மணியளவில் ஏற்பட்ட பதற்றமான சூழலைக் கட்டுப்படுத்த பாதுகாப்புப் படையினர் பெரும் முயற்சி எடுத்தனர். பின்னர் நிலைமையைச் சீர்செய்ய பாதுகாப்புப் படையினர் சிறைச்சாலைக்குள் பிரவேசித்தனர். சிறைச்சாலைக்குள் நிலவும் சூழலைக் கண்காணிக்க விமானப் படையின் ட்ரோன் விமானங்களும் பயன்படுத்தப்பட்டன என்றார். (ம-7)

## 28 ஏக்கர்...

சுவீகரிக்கும் நோக்கில், நில அளவை பணிகளை முன்னெடுக்க நில அளவை திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மருதங்கேணி (ஜே/428) கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட "தேவதுரவு" என்று அழைக்கப்படும் காணியே இவ்வாறு சுவீகரிப்பு செய்யப்படவுள்ளது.


மருதங்கேணி பிரதேச செயலாளரின் 21.05.2026 திகதியிடப்பட்ட நில அளவைக் கோரிக்கைக்கு அமைவாகவும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரின் வர்த்தமானி குறிப்பிற்கு இணங்கவும் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாளை மறுதினம் 2026.07.09 ஆம் திகதி முதல் தொடர்ந்து வரும் வேலைநாட்களில், தினசரி காலை 9.00 மணி முதல் மாலை வரை காணி சுவீகரிப்புச் சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் நில அளவை பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

குறித்த காணிக்கு உரிமை கோரும் பொதுமக்கள் அல்லது தரப்பினர் எவரேனும் இருப்பின், காணி தொடர்பான தகுந்த ஆவணங்களுடன் குறிப்பிட்ட திகதிகளில் வருகை தந்து, எல்லைகளைக் காண்பித்து நிலஅளவைத் திணைக்கள அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# மரண அறிவித்தல்

தோற்றம்
04 - 08 - 1953



மறைவு
04 - 07 - 2026

## ஆறுமுகம் ஏகானந்தசிவம்

(ஓய்வுநிலை முகாமைத்துவ உத்தியோகத்தர் – யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் யாழ்.மாநகர சபை)

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 340, கோயில் வீதி நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஏகானந்தசிவம் (சிவம்) அவர்கள் கடந்த 04.07.2026 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வியாழம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன் - யோகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் மீராதேவி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தபிள்ளை, சதாநந்தசிவம், நித்தியானந்தசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கஜலக்ஷி, கஜானனி, அபீசன், அனுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாரங்கன், சிந்து ஆகியோரின் ஆசைச் சித்தப்பாவும் சஞ்சயன், மனுஜ், சஷாங்கி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுரபி, உமை, அருவி, இயல் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் சாட்சாயினி, சகுந்தலாதேவி, தனிஸ்ராதேவி, காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் ஈஸ்வரி, மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 08.07.2026 புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில், அன்னாரின் இல்லத்தில் (நல்லூர்) நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.30 மணியளவில் மண்டைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

340, கோவில் வீதி,
நல்லூர்.

(C-5983)

தகவல் : குடும்பத்தினர்
077 557 3860 - அபீசன்
077 967 7158 - அனுஜன்


புதிய பிரிவுகள் ஆரம்பம்
11.07.2026

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AAI, AA2, AA3)
Qualification :- G.C.E O/L 6 Passes
(Medium - Tamil & English)

A/L மாணவர்களின் நலன் கருதி வார நாட்களிலும் aat வகுப்புக்கள் நடாத்த தீர்மானித்துள்ளோம்.

கணக்காளர் கற்கைநெறிகள்
Chartered Accounting Courses
"New Syllabus" - Business Level
Qualification :- G.C.E A/L 3 Passes
(Medium - Tamil & English)

Further Details :- Jaffna College
Undergraduate Dept.
464, Hospial Road, Jaffna.
(யாழ்.ஆஸ்பத்திரி வீதியில், கொமர்ஷல் வங்கி அருகில்)
021 222 3382 / 0774405917
(C-5982)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5984)
076 825 7716 (ஆகாஸ்)

வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் வெல்டிங் வேலைக்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.
சம்பளம் : 5000/= - 10,000/=
T.P : 077 592 5088
077 171 9762
(7996)

வெறுப்பு யாருக்கு எதிராகவும் திரும்பலாம்
நினைவில் கொள்ள :
நீங்கள் வெறுப்பூட்டும் தகவலை பகிரும் போது

நாளை அதே வெறுப்பின் இலக்காக நீங்களும் மாறலாம்.

நிகழ்நிலையில் உள்ள தீங்கு விளைவிக்கும் கதைகள் பெரும்பாலும் கோபம், பயம் மற்றும் சமூகப் பிரிவினையை உருவாக்கும் அரசியல் அல்லது தனிப்பட்ட நோக்கங்களுக்காக உருவாக்கப்படுகின்றன.

அதை தொடர்ந்தும் பரப்பாதீர்கள்.
வெறுப்பை அதன் முளையிலேயே கிள்ளி எறியுங்கள்.

இந்த செய்தி SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.
(7775)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org